தினமலர்
நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்

காட்டுமன்னார்கோவிலில் வேளாண் அலுவலர் இல்லை : விவசாயிகள் தவிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,00:51 IST

**நாட்டுக்கோழியை பண்ணையில் வளர்த்தால் அதிக எடையுடன் லாபம்**

ஈரோடு: ""மேய்ச்சல் நிலங்களில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளை விட பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் சமச்சீர் உணவுடன் மூன்று மாதத்தில் நல்ல எடையை தருகிறது,'' என, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய டாக்டர் கூறியுள்ளார். ஈரோடு மாவட்டத்தில் 106 முட்டை கோழி பண்ணைகளில் 41.38 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 1,197 கறிக்கோழி பண்ணைகளில் 63.9 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. பெருந்துறை, ஈரோடு பகுதியில் முட்டை கோழி பண்ணைகளும், காங்கேயம், தாராபுரம், மூலனூர் பகுதிகளில் கறிக்கோழி பண்ணைகளும் அதிகளவில் உள்ளன. முன்பெல்லாம் கிராமபுறத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு அதிகமிருந்தது. வீட்டுக்கு பத்து முதல் 15 கோழிகள் வளர்க்கப்பட்டன. இந்த கோழிகள் பெரும்பாலும் வேளாண் நிலத்தில் கிடக்கும் தானியங்கள், புழு, பூச்சிகளை உண்டு வாழ்ந்தன. ஆண்டுக்கு 60 முட்டைகள் வரை உற்பத்தி செய்தன. இப்போது பிராய்லர் கோழிகளைப் போல், நாட்டுக் கோழிகள் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 13க்கும் மேற்பட்ட  நாட்டுக்கோழி பண்ணைகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுக் கோழிகள் உள்ளன. இங்குள்ள பண்ணைகளில் தாய்க்கோழி மூலம் மூட்டைகள் மற்றும் குஞ்சுகள் (சிட்ஸ்) உற்பத்தி செய்யப்படுகிறது. முட்டைக்காக வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளுக்கு இரண்டு சதுர அடியிடம் போதுமானது. இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிக்கு ஒரு சதுரஅடி இடம் போதுமானது. பிராய்லர் கோழியை விட நாட்டுக்கோழி இறைச்சியில் சுவை அதிகம். நாட்டுக்கோழிக்கு தீவனச் செலவும் குறைவுதான். நாட்டுக்கோழிகள் "வெள்ளை கழிச்சல்' நோயால் மட்டுமே அதிகம் பாதிக்கப்படும். அவற்றை தடுக்க மாவட்ட கால்நடை மருத்துவமனையில் பிரதிவாரம் சனிக்கிழமை தடுப்பூசி போடப்படுகிறது. கால்நடை

மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் டாக்டர் தனசீலன் கூறியதாவது: நாட்டுக்கோழிகளை இருமுறையில் வளர்க்கலாம். ஒன்று தரையில் உமி போட்டு வளர்க்கலாம். மற்றொன்று கூண்டுக்குள் வளர்க்கலாம். நாட்டுக்கோழிக்கு சாதாரணமாக சமச்சீர் உணவு கொடுத்து வளர்த்தால் ஐந்து மாதத்தில் 1.300 கிலோ முதல் 1.400 கிலோ வரை எடை கிடைக்கும்.
உணவு தேட ஒரு கோழி நாள் முழுக்க காடு, மேடு என அலைந்து திரிந்து தனது சக்தியை விரயம் செய்ய வேண்டி வரும். ஆனால், பண்ணையில் வளர்க்கும் நாட்டுக் கோழிகள் அப்படியல்ல; தேவையான அளவு சமச்சீர் உணவு கொடுத்து பராமரித்தால் மூன்று மாதத்தில் அதே எடைக்கு வந்து விடும். நல்ல விலையும் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**அரசு சார்பில் 5,360 டன் புதிய நெல் கொள்முதல் கூடுதல் நிலையம் திறக்க நடவடிக்கை**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,01:55 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நான்கு நெல் கொள்முதல் நிலையங்களில் 5,360 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், கூடுதலாக ஆறு கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால்கள் பாசன வசதி பெறுகிறது. ஏப்ரல் 15ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் அறுவடை தற்போது நடக்கிறது. நெல் கொள்முதலுக்காக முதல்கட்டமாக பவானி தாலுகா அத்தாணி, பெருந்துறை தாலுகா காஞ்சிகோவில், கோபி தாலுகா நஞ்சப்பகவுண்டன் பாளையம், ஒத்தக்குதிரை ஆகிய நான்கு இடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. இங்கு 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள சன்ன ரக நெல்லுக்கு 11 ரூபாய், மோட்டா ரகத்துக்கு 10.50 ரூபாய் வழங்கப்படுகிறது. அத்தாணியில் 4,608 டன், காஞ்சிகோவில் 2,911 டன், நஞ்சகவுண்டன்பாளையம் 3,088 டன், ஒத்தகுதிரை 2,762 டன் சேர்ந்து மொத்தம் 5,036 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அறுவடைப் பணி தீவிரமாக நடப்பதால், விவசாயிகள் கூடுதலாக கொள்முதல் நிலையங்களை திறக்க வலியுறுத்தினர். இதன்படி, கூகலூர், கள்ளிப்பட்டி, பி.மேட்டுபாளையம், மேவானி, காசிபாளையம், நாகரணை ஆகிய பகுதிகளில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அதிகாரிகள்

நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் விஸ்வநாதன் கூறியதாவது: மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நான்கு கொள்முதல் நிலையங்களிலிருந்து 5,360 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக கொள்முதல் நிலையங்கள் அமைக்க கலெக்டர் சுடலைக்கண்ணன் உத்தரவிட்டுள்ளார். கூடுதலாக கூகலூர், கள்ளிபட்டி, பி.மேட்டுபாளையம், மேவானி, காசிபாளையம், நாகரணை ஆகிய பகுதிகளில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**ஈரோடு மாவட்டத்தில் பருத்தி உற்பத்தி சரிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,03:13 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பருத்தி உற்பத்தி பெரும் சரிவு கண்டுள்ளது.ஈரோடு மாவட்டம் பவானி, பெருந்துறை, அம்மாபேட்டை, அந்தியூர், அத்தாணி, சத்தி உள்ளிட்ட பல இடங்களில் பருத்தி பயிரிடப்படுகிறது. பருத்தி பயிரிட்ட விவசாயிகள், அறுவடை செய்த பருத்தியை அந்தியூர் மற்றும் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு விற்பனைக்கு கொண்டு சேர்க்கின்றனர். கோவை, பெருந்துறை, திருப்பூர், கோபி, அன்னூர் உட்பட பல ஊர்களிலிருந்து வியாபாரிகள் பருத்தி ஏலத்தில் கலந்து கொள்கின்றனர்.ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மாசி மாத இறுதியில், பெருவாரியாக, ஐந்தாம் நம்பர், சுரபி, பி.டி,, காட்டன் ரக பருத்தி மட்டும் அதிகளவில் பயிரிடுகின்றனர். அதிலும், பீரிடு ரகத்திலான விதையின் மூலம், அதிகளவு மகசூல் பெற முடியும் என்பதால், மவுசு அதிகம். பருத்தியிலிருந்து எடுக்கப்படும் இழைகள் மூலமாக காட்டன் துணி வகைகளும், பிரிக்கப்பட்ட விதைகளை மீண்டும் பதப்படுத்தி விற்கவும், எண்ணெயும் தயாரிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களால், பருத்தி பயிரிடுவதை விவசாயிகள் மறந்தே போயினர். காரணம், குலை குலையாக தள்ளிய பருத்தி செடியை கோடை காற்றும், மழையும் துவம்சம் செய்து விடுகிறது. இதனால், செடியிலிருக்கும் காய்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து, முதலுக்கே மோசம் விளைகிறது.மேலும், செடி வளரவும், காய் பிடிப்பதற்கும் இடையூறாக மாவுப்பூச்சி தொல்லை அதிகரிக்கிறது. இவைகளையெல்லாம்

தாண்டி, அறுவடைக்கு வரும் பருத்தியை விற்பனைக்கு கொண்டு சேர்த்தாலும் விலை பிரச்னையை தீர்க்க முடியாததாக இருந்தது.

ஒரு கிலோ பருத்தி விலை 20 ரூபாயிலிருந்து 28 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. இதனால், சென்றாண்டு பருத்தி பயிரிட்ட விவசாயிகளுக்கு இயற்கை ஒரு புறமும், மாவுப்பூச்சி ஒரு புறமும், விலை குறைவு இன்னொரு புறமுமாக மும்முனை தாக்குதல் நடத்தியதால், விவசாயிகள் அனைவரும் நசுக்கப்பட்டனர்.பருத்தி பயிரிட கிடங்கு அமைத்து, விதை ஊன்றி, பயிர் வளர்வதற்கு அடி உரம் சேர்த்து, களையெடுத்து என பல வேலைகளுக்கும் ஆன செலவை, அறுவடை மூலம் ஈடு செய்ய முடியாமல் விவசாயிகள் நஷ்டத்தில் தள்ளப்பட்டனர். பருத்தி பயிரிடுவதால் லாபம் பார்க்க முடியாது என, கருதிய பெரும்பாலான விவசாயிகள், நிலத்தில் பயிர் செய்யாமலே விட்டு விட்டனர். இதனால், ஈரோடு மாவட்டத்தின் பருத்தி பயிரிடும் சதவீதம் குறைந்து போனது. மேலும், விவசாய கூலி வேலை செய்ய ஆட்கள் கிடைக்காததும், பின்னடைவுக்கு பெரும் காரணமாக அமைந்து விட்டது.பருத்தி பயிரிடுவதை நிறுத்திய விவசாயிகளில் பலர் மஞ்சளுக்கு மாறிவிட்ட நிலையிலும், ஒரு சில விவசாயிகள் பருத்தி பயிரிடுவதை தொடர்ந்தனர். பருத்தி உற்பத்தி குறைந்து போனதால், நடப்பாண்டு பருத்தி விலை நல்ல முன்னேற்றம் இருந்தது. ஒரு கிலோ பருத்தி விலை 41 ரூபாய் வரையில் அதிகபட்சமாக விலை போனது. இதே ரீதியில் அடுத்தாண்டும் நிலையான விலை இருக்கும் பட்சத்தில், உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேங்காய் பருப்பு விலை ரூ.4 உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:52 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் பருப்புக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. தேங்காய் பருப்புக்கு இரண்டாண்டுக்கு முன் 40 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதன் பிறகு 30 ரூபாயாக விலை குறைந்தது. ஜனவரி மாதம் முதல் தேங்காய் பருப்பு விலை ஏறுமுகமாக இருந்தது. மே மாதம் சுட்டெரித்த வெயில் காரணமாக இளநீர் உற்பத்தி மற்றும் துவரம் பருப்பு விலை உயர்வு காரணமாக ஹோட்டல்களில் உணவுப் பண்டங்கள் தயாரிப்பில் தேங்காய்க்கு நல்ல கிராக்கி இருந்தது.

தேங்காயை பறித்து, உடைத்து, காயவைத்து தரமான பருப்பாக மாற்றுவதை விட, இளநீராக, தேங்காயாக விற்பதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். தற்போது, பருவமழை துவங்கியுள்ளதால் இளநீர் தேவை குறைந்து வருகிறது. துவரம் பருப்பு விலை குறைந்து வருவதாலும், எண்ணெய் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய்க்கு நல்ல விலை கிடைப்பதாலும், விவசாயிகள் தேங்காய் பருப்பு உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு மாதமாக தேங்காய் பருப்பு வரத்தும் அதிகரித்துள்ளது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நேற்று 691 மூட்டை தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தது. கடந்த வாரத்தை விட 106 மூட்டைகள் அதிகமாக வந்தது. அதிகபட்சமாக கிலோ 44.18 ரூபாய், குறைந்தபட்சமாக 41.16 ரூபாய், சராசரியாக 43.78 ரூபாய்க்கு விற்றது. நடப்பு வாரம் 4.10 ரூபாய் விலை அதிகரித்திருந்தது. மொத்தம் 14 லட்சம் ரூபாய்க்கு தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**மூலிகை மருத்துவச் செடிகளை ஆவணப்படுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:43 IST

கோவை: ""உலகளவில் 80 சதவீத மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ள மூலிகை மருத்துவத்தின் சந்தை மதிப்பு, 3.22 லட்சம் கோடியாக உள்ளது. 2050ல் இது 32.20 லட்சம் கோடியாக உயரும் என எதிர் பார்க்கப்படுவதால் மூலிகை மருத்துவச் செடிகளை அடையாளம் கண்டு உடனடியாக ஆவணப்படுத்துவது முக்கியம்,'' என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு இயக்குனர் இளவழகன் பேசினார். பாரதியார் பல்கலையில் மூலிகை மருத்துவம் குறித்த தேசிய கருத்தரங்கம் நடந்தது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மூலிகை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், மூலிகை மருத்துவ நிறுவனங்கள் உட்பட 700க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர். துவக்க விழாவில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின்(டி.ஆர்.டி.ஓ) இயக்குனர் இளவழகன் பேசியதாவது: ஆங்கில மருந்துகளின் பக்க விளைவுகாரணமாக, பக்கவிளைவுகள் இல்லாத மூலிகை மருந்துகளை மேற்கத்திய நாடுகளில் பெருமளவு பயன்படுத்து கின்றனர். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் தற்போது மூலிகை மருத்துவம் குறித்த ஆராய்ச்சி அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. மோசமான சூழலில் பணிபுரியும் ராணுவ வீரர்களின் உடல் நலனை மேம்படுத்துவதிலும், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் கவனம் செலுத்துகிறது. நோய் வராமல் தடுக்கும் திறன் மூலிகை மருந்துகளுக்கு உள்ளதால், இன்று உலகளவில் 80 சதவீத மக்கள் மூலிகை

மருத்துவத்தை நம்புகின்றனர். இம்மருத்துவத்தின் உலகளாவிய சந்தை மதிப்பு, 3 லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது. 2050ல் 32 லட்சம் கோடி ரூபாயாக ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் உயிர்ச்சூழல் மண்டலம் அதிகமாக உள்ளதால், மூலிகை மருத்துவ மேம்பாட்டில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உள்ளது. நம் நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் இமயமலைச் சாரல்களில் ஏராளமான மூலிகைச் செடிகள் உள்ளன. இன்று உலகில் 7,000 மருத்துவ குணம் கொண்ட செடிகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் மூலிகை மருத்துவத்துக்கு சுமார் 700 செடிகள் பயன்படுத்தப்படுகின்றன. இது போன்ற செடிகளை அடையாளம் கண்டு ஆவணப்படுத்துவது முக்கியம். உலக சுகாதார நிறுவனம் மூலிகை மருந்துகளை அங்கீகரித்துள்ளதால், அதன் அறுவடை தொழில் நுட்பம், பதப்படுத்துதல், பாதுகாத்தலை முறைப்படுத்த வேண்டும். பல கொடிய நோய்களை தீர்க்கும் வல்லமை, மூலிகை மருத்துவத்துக்கு உள்ளது. இது போன்ற மூலிகைகளை அடையாளம் கண்டு வெளியே கொண்டு வருவது ஆராய்ச்சியாளர்களின் கையில்தான் உள்ளது. இன்று தகவல் தொழில் நுட் பத்துக்கு அடுத்தபடியாக மூலிகை மருத்துவம் அதிக வருவாய் தருகிறது. இந்த வாய்ப்பை இந்தியா சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு, இளவழகன் பேசினார். போலீஸ் உதவி கமிஷனர் பாலாஜி சரவணன் பேசுகையில், ""மருத்துவ மூலிகைகளை நாம் பழைய காலம் முதலே பயன்படுத்தி வருகிறோம். புதிதாக கண்டுபிடித்து விடவில்லை. நவீன மருத்துவ அறிமுகத்தால் மூலிகை மருத்துவத்தின் மகத்துவத்தை மறந்து விட்டோம். நமது பாசுமதி அரிசிக்கு அமெரிக்கர்கள் காப்புரிமை பெற்று விட்டனர். இதுபோல் நமக்கு சொந்தமான இயற்கை வளங்களை நாமே பயன்படுத்த முடியாத நிலை வருவதற்குள், புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுக்கு முதலில் காப்புரிமை பெற்று விட வேண்டும்," என்றார். துணைவேந்தர் சுவாமிநாதன், மைசூருவில் உள்ள உணவு பாதுகாப்பு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி ராதாகிருஷ்ணா, தாவரவியல் துறைத் தலைவர் மணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை பேராசிரியர் பரிமேலழகன் மற்றும் தாவரவியல் துறை பேராசிரியர்கள் செய் திருந்தனர். கோவையில் அபூர்வ துளசிச் செடி டி.ஆர்.டி.ஓ., இயக்குனர் இளவழகன் கூறுகையில், ""டி.ஆர்.டி.ஓ.,வில் மலேரியா நோயை எதிர்க்கும் முக்கிய மூலக்கூறு கண்டறியப் பட்டுள்ளது. இம்மருந்து பரிசோதனை கட்டத்தில் உள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் வெளியிடப்படும். கதிர் வீச்சில் இருந்து பாதுகாப்பு தரும் அரிய வகை துளசிச் செடி, கோவையில் மட்டுமே உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. ""இது

தொடர்பான ஆராய்ச்சி முடிவுகள் வெளியானால், கதிர்வீச்சு அபாயத்தில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் உலகின் முதல் மூலிகை மருந்து என்ற பெருமை கிடைக்கும். ""லடாக் பள்ளத்தாக்கில் கண்டறியப்பட்டுள்ள ஒரு மூலிகை, காயங்களை உடனடியாக குணமாக்கும் தன்மை கொண்டதாக உள்ளது. ""இது போன்ற பல்வேறு ஆராய்ச்சிகளை டி.ஆர்.டி.ஓ., மேற்கொண்டு வருகிறது," என்றார்.

**சோலையாறு நீர்மட்டம் 142 அடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:48 IST

வால்பாறை: வால்பாறையில் மீண்டும் மழை சூடுபிடித்துள்ள நிலையில், சோலையாறு அணையின் நீர்மட்டம் 142.29 அடியாக உயர்ந்தது. வால்பாறையில் கடந்த சில நாட்களாக மழைப்பொழிவு குறைந்தது. இதனால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைந்தது. கடந்த இரண்டு நாட்களாக வால்பாறை டவுன் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் கன மழை பெய்துவருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடுமையான குளிரிலும் தொழிலாளர்கள் தலையில் பிளாஸ்டிக் மைக்கா அணிந்து தேயிலை பறித்து வருகின்றனர். சோலையாறு அணை நீர்மட்டம் நேற்று காலை142.29 அடியாக உயர்ந்தது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 96 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு விநாடிக்கு 400 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்)வால்பாறை - 33, மேல்நீராறு - 43, கீழ்நீராறு - 26, சோலையாறு - 33, பரம்பிக்குளம் - 27.

**சொட்டு நீர் மானியம் வழங்குவதில் மாற்றம்: விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,03:17 IST

திருப்பூர்: "சொட்டு நீர் பாசனத்துக்கு அளிக்கும் மானிய முறையில், அரசு மாற்றம் கொண்டு வர வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, சொட்டு நீர் பாசனம் வெகுவாக உதவுகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க, 65 சதவீதம் வரை அரசு மானியம் அளிக் கிறது. வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை சார்பிலும் மானியம் வழங்கப்படுகிறது.

ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது. அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்கள் மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும் என்பது விதியாக உள்ளது. இந்நடைமுறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்பதை விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்கள் மூலம் மட்டுமே சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும். சுயமாக பொருட்களை வாங்கினால், அதற்கு மானியம் இல்லை. பரிந்துரைத்த நிறுவனங்களின் பொருட்கள் விலை கூடுதலாக உள்ளன. லோக் கல் கம்பெனிகளின் பொருட்களை பயன்படுத்தினால், செலவு குறைய வாய்ப்புள்ளது. பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் வெளியூரை சேர்ந்தவையாக இருக்கின்றன. பழுது ஏற்பட்டால், வால்வு, பில்டர், வாசர் உள்ளிட்டவை வெளியில் எங்கும் கிடைப்பதில்லை. நிறுவனம் அனுப்பி வைக்கும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. அவை வரும் வரை காத்திருந்தால், பயிர்களின் வளர்ச்சி பாதிக்கும் சூழல் ஏற்படுகிறது. புதிய தொழில்நுட்பம் வருவதால், பழைய முறைகளுக்கு உதிரி பொருட்கள் உடனடியாக கிடைப்பதில்லை. கம்பெனியில் இருந்து வர வேண்டும் என தாமதம் செய்கின்றனர். லோக்கல் பகுதிகளில் அனைத்து உதிரி பொருட்களும் வழங்குவதற்கு, நிறுவனங்களை தயார்படுத்த வேண்டும். சொட்டு நீருக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்து அமைப்பதில், விவசாயிகளின் விருப்பத்துக்கே விட வேண்டும். சொட்டு நீர் பாசன மானியம் அளிப்பதில் மாற்றம் கொண்டு வர வேண்டும். பல்வேறு இலவச திட்டங்களை அளிக்கும் அரசு, ஏற்கனவே உள்ள திட்டம் முழுமையாக விவசாயிகளுக்கு கிடைக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர். அதிகாரிகள் கூறுகையில், "கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட மேற்கு மண்டலத்துக்கு, 21 நிறுவனங்களை அரசு பரிந்துரைத்துள்ளது. சொட்டு நீர் அமைப்பதற்கான பொருட்களின் மதிப்புக்கு மட்டும், 65 சதவீதம் மானியம் கிடைக்கும். வரி விதிப்பு, போக்குவரத்து செலவு, விளைநிலத்தில் குழி எடுத்தல் செலவுக்கு மானியம் கிடைக்காது. பயிர்களின் இடைவெளிக்கு ஏற்றவாறு, ஒரு யூனிட் பகுதிக்கு அரசு நிர்ணயித்துள்ள அளவே மானியம் வழங்கப்படும். தற்போது விவசாயிகள் விடுத்துள்ள கோரிக்கையை, தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும்,' என்றனர்.

**பயிர்க்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமா?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,01:31 IST

உடுமலை:தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் கட்டுப்பாடுகளை தளர்த்தி கடன் வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., இரண்டாம் மண்டலம் மற்றும் அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இரண்டு பாசன திட்டங்களிலும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.சாகுபடி பணிகளுக்கான செலவினங்களுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படும் பயிர்க்கடனை மட்டுமே விவசாயிகள் நம்பியுள்ளனர்.

இந்நிலையில், பயிர்கடன் பெற கூட்டுறவு சங்கங்களில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். விண்ணபத்துடன் விளைநிலத்தின் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்த முடிவுகளை இணைக்க வேண்டும். கிராமப்பகுதியில் இவ்வகை பரிசோதனைகளை செய்ய எவ்வித வசதியும் இல்லை. இதனால், விவசாயிகள் பரிசோதனைக்காக அலைய வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. பரிசோதனைகளை மேற்கொள்ள தேவையான வசதிகளை அரசு ஏற்படுத்திய பின்னர் இத்திட்டத்தை கட்டாயப்படுத்தலாம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குழப்பம் ஏற்படுத்தும் காப்பீட்டு திட்டம்: இந்தாண்டு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து பயிர்களையும் காப்பீடு செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர்கடன் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீடு திட்டம் ட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.இத்திட்டத்தால் கிடைக்கும் பலன்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. கோவை மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள ஏழு வட்டாரங்களுக்கு வானிலை சார்ந்த பயிர்க்காப்பீட்டு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. திட்டத்தில், சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு பிடித்தம் செய்யப்படும் பிரிமீயம் தொகை ஒராண்டு வட்டிக்கு இணையாக உள்ளது. இவ்வாறு, அதிக தொகை பயிர்க்கடனில் பிடித்தம் செய்யப்படும் நிலையில் இந்த திட்டத்தால் முழுமையான பலன் கிடைக்குமா என்பது விவசாயிகளிடம் கேள்விக்குறியை உருவாக்கியுள்ளது.உதாரணமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் மக்காச்சோள

சாகுபடிக்கு 7 ஆயிரம் ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இதில், ஏக்கருக்கு 276 ரூபாய் காப்பீடு பிரிமீயமாக பிடித்தம் செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடி ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் கடனாகவும், 826 ரூபாய் பிரிமீயமாகவும் பிடித்தம் செய்யப்படுகிறது. பருத்திக்காக பயிர்கடன் பெறும் விவசாயி ஒராண்டில் கடன் தொகையை செலுத்த முடியாவிட்டால் அவருக்கு 840 ரூபாய் வட்டியாக கணக்கிடப்படும். இதற்கு இணையாக காப்பீடு பிரிமியம் தொகை 826 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. கட்டாயப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளார். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பல்வேறு திட்டங்களின் கீழ் காப்பீடு செய்யும் நிலையில் பயிர்கள் பாதிக்கப்படும் போது நிவாரணம் கிடைப்பதில்லை. வருவாய் உள்வட்டம் முழுவதும் பயிர்கள் பாதிக்கப்பட்டால் மட்டுமே குறைந்தளவு நிவாரணம் கிடைக்கிறது.

தற்போதைய காப்பீட்டு திட்டத்தில் நிவாரணம் கிடைப்பதற்காக நடைமுறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கணிசமான தொகை பிடித்தம் செய்யப்படுவதால், செலவினங்களுக்கு பிரச்னை ஏற்படுகிறது. அரசு இது குறித்து பரிசீலனை செய்து பயிர்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும்', என்றனர்.புலம்பும் அலுவலர்கள்தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் அலுவலர்கள் காப்பீட்டு திட்டத்திற்காக கடன் தொகையில் பிடித்தம் செய்யப்படுவதை விளக்கினாலும் விவசாயிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால், அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும் வாக்குவாதம் ஏற்படுவது தொடர்கதையாகியுள்ளது. அனைத்து விவசாயிகளையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர உயரதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இரண்டு தரப்பிலும் சிக்கும் அலுவலர்கள் தங்கள் பிரச்னை குறித்து புலம்பி வருகின்றனர்.

**குறிச்சிக்கோட்டையில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,03:34 IST

உடுமலை: பருவநிலை மாற்றங்களினால்,நோய் பரவாமல் தடுக்க கால்நடைகளுக்கு கட்டாயம் குடற்புழு நீக்க சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. உடுமலை அருகே குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தகத்தில் நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. கால்நடை துறை டாக்டர் சதீஷ் தலைமை வகித்து பேசியதாவது:

மழைக்காலங்களில் முளைவிடும் புதிய புல் நுனிகளில் பல்வேறு புழுக்களின் முட்டைகள் இருக்கும். இந்த புற்களை கால்நடைகள் உண்பதால் அவற்றின் குடலில் முட்டைகள் சென்று ஜீரண சக்தி குறைந்து பல்வேறு பிரச்னைகள் ஏற்படும். இப்பிரச்னைக்கு தீர்வாக கால்நடைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை கட்டாயம் குடற்புழு நீக்க சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கால்நடை துறை சார்பில் கிளை நிலையங்களிலும், மருத்துவ முகாம்களிலும் இலவசமாக இந்த சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு, சிறப்பு கால்நடை முகாம்களை விவசாயிகள் பயன்படுத்த கொள்ளலாம். இந்த முகாம்களை விவசாயிகள் பயன்படுத்தி கொள்வதால் கால்நடைகளை நோய் தாக்குதலிலிருந்து பாதுகாக்கலாம்', இவ்வாறு பேசினார். கால்நடை ஆய்வாளர் அப்துல் கலாம் நோய் தடுப்பு முறைகள் குறித்து பேசினார். பார்த்தசாரதிபுரம் மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**24 கிலோ எடை சேனைக் கிழங்கு;இயற்கை விவசாயத்தில் நிரூபணம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,01:30 IST

பந்தலூர்: இயற்கை உரம் மூலம் விவசாயம் செய்தால் நல்ல பயன் கிடைக்கும் என நிரூபித்திருக்கிறார் பந்தலூர் எருமாடு பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர். கடந்த பல்லாண்டுகளுக்கு முன்னால், வனப்பகுதிகளாக காணப்பட்ட நிலங்கள் பல, தற்போது விவசாய நிலங்களாக மாற்றம் பெற்றுள்ளன. விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை உரங்களும், மெல்ல, மெல்ல கைவிடப்பட்டு, ரசாயன உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் பலர் விரும்புகின்றனர். ரசாயன உரத்தை உபயோகிப்பதால், மண்ணின் இயற்கைத் தன்மை அழிந்து, தொடர்ந்து விவசாயம் மேற்கொள்ளும் போது, மகசூலும் பாதிக்கப்படுகிறது. விவசாயத்தில் இயற்கை உரத்தின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என, தோட்டக்கலைத் துறையினர் வலியுறுத்துகின்றனர். பந்தலூர் கையுன்னி, எருமாடு பகுதிகளில் உள்ள விவசாயிகள், இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனரர். எருமாடு அடுத்துள்ள சிறச்சால் பகுதியை சேர்ந்தவர் மாதவன்.

தேயிலை, காபி, குருமிளகு, வாழை, காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இவர், இயற்கை உரங்களை பயன்படுத்தி வருகிறார். தோட்டத்தில் உள்ள குப்பைக் குழிக்கு அருகில் சேனைக் கிழங்கு நடவு செய்துள்ளார்.

வீட்டு முற்றத்தில் சேகரிக்கும் குப்பை, தழைகளை உரமாக இட்டு பராமரித்ததால், செடியில் இருந்து, 24 கிலோ எடை கொண்ட ஒரு சேனைக் கிழங்கு விளைந்துள்ளது. மாதவன் கூறுகையில், ""சேனைக் கிழங்கு சாதாரணமாக 5 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். இயற்கை விவசாயத்தின் மூலம் விளைவிக்கப்பட்ட இந்த கிழங்கு, 24 கிலோ எடை கொண்டுள்ளது. அனைத்து விவசாயத்திலும் இயற்கை உரத்தை பயன்படுத்தினால், நல்ல பயனை பெறலாம்," என்றார்.

**மானிய விலையில் சம்பா நெல் விதை விவசாயிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:53 IST

முசிறி: முசிறி வேளாண் கோட்ட வேளாண் உதவி இயக்குனர் ராஜாமணி வெளியிட்ட அறிக்கை: முசிறி வட்டாரத்தை சேர்ந்த சம்பா நெல் சாகுபடி விவசாயிகள் தற்சமயம் சம்பா நெல் சாகுபடி பருவம் தொடங்கி விட்டதால் விவசாயிகளுக்கு தேவையான சம்பா நெல் விதைகளான மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, பி.பி.டி 5204, ஏடிடி 39 ஆகிய நெல் ரகங்கள் முசிறி மற்றும் புலிவலம் வேளாண் விரிவாக்க மையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு மான்ய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தாண்டு ஒருங்கிணைந்த தான்ய அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செம்மை நெல் சாகுபடி 570 ஏக்கரில் செயல்படுத்தப்பட உள்ளது. எனவே, முசிறி பகுதி மற்றும் புலிவலம் பகுதி விவசாயிகள் தங்களது கிராமத்திற்கு வருகை தரும் உதவி வேளாண் அலுவலர்களிடம் மான்ய விண்ணப்பம் பெற்று, விதைகள் பெற்று பயன் பெருமாறும் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் பெயர் பதிவு செய்து இடுபொருளை பெறலாம்.

**வேளாண் அதிகாரி முசிறியில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:49 IST

முசிறி: திருச்சி மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (மாநில திட்டம்) நடேசன் முசிறி பகுதியில் நடந்து வரும் திட்ட பணிகளை பார்வையிட்டார்.

முசிறியில் ஆறு லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தினையும், 25 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் விதை சேமிப்பு கிடங்கினை நடேசன் பார்வையிட்டார். அந்தரப்பட்டி கிராமத்தில் விவசாயி சுகுமாரின் வயலில் அமைக்கப்பட்டிருந்த கம்பு விதைப்பண்ணையை பார்வையிட்டார். அங்கிருந்த விவசாயிகளிடம் தரமான சான்று பெற்ற விதைகளை உபயோகித்து சாகுபடி செய்தால் பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து தப்பலாம். கூடுதலான மகசூலும் கிடைக்கும். ஆகவே, சான்று பெற்ற விதைகளை உபயோகியுங்கள். அதிகாரிகளும், விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்க வேண்டும் எனக்கூறினார்.

முசிறி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் ஆய்வு செய்து விதை இருப்பு, விதை விநியோகம்  குறித்து ஆய்வு செய்தார். துணை இயக்குனருடன் முசிறி வேளாண் உதவி இயக்குனர் (பொ) ராஜாமணி உதவி விதை அலுவலர் ஜெயப்பிரகாஷ், வேளாண் உதவி அலுவலர் ராஜா மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**அரசின் இலவச மின்மோட்டார் திட்டம் : விவசாய சங்க பிரதிநிதிகள் முதல்வருக்கு நன்றி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:53 IST

திருச்சி: தமிழக முதல்வர் கருணாநிதியை நேற்று நேரில் சந்தித்த திருச்சி விவசாய சங்க பிரதிநிதிகள், "இலவச மின்மோட்டார் வழங்குவதாக அறிவித்ததற்கு' நன்றி தெரிவித்தனர்.
புதிய கலெக்டர் அலுவலகம் கட்டடம் திறப்புவிழா, பல்வேறு அரசு நிகழ்ச்சி, அன்பில்தர்மலிங்கம் சிலை திறப்புவிழா, தி.மு.க., பொதுக்கூட்டம் என பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல்வர் கருணாநிதி நேற்று ரயில் மூலம் திருச்சி வந்தார். சங்கம் ஹோட்டலில் தங்கியிருந்த முதல்வர் கருணாநிதியை திருச்சி விவசாய சங்க பிரதிநிதிகள் நேற்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.
திருச்சி மாவட்ட காங்கிரஸ் பொறுப்புக்குழு உறுப்பினர் புலியூர்நாகராஜன், பாரதியகிஷான் சங்க மாநில பொதுச்செயலாளர் அய்யாக்கண்ணு, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க புரவலர் தீட்ஷிதர் பாலசுப்பிரமணியன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கருணாநிதியை சந்தித்தனர்.

பின்னர் அவர்கள் கூறியதாவது: விவசாய கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றினார். நெல் உற்பத்தி செய்யும் விவசயிகளுக்கு குவிண்டால் நெல் 1,100 ரூபாயாக உயர்த்தினார். 15 லட்சம் இலவச மின்மோட்டார் வழங்குவதாக அறிவித்துள்ளார். இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா விவசாய கடன் வழங்கியுள்ளார்.
விவசாயிகளுக்கு உரம் மான்யம், விவசாயத்துக்கான நவீன கருவி வாங்க 100 சதவீதம் மற்றும் 50 சதவீதம் மான்யம் வழங்கி விவசாயிகளை உற்சாகப்படுத்தினார். அதற்காக முதல்வருக்கு நன்றி, பாராட்டை தெரிவித்தோம். விவசாயத்துக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.
"நீர்மட்டம் உயரவும், காவிரி கரையோரம் பகுதி காய்வதை தடுக்கவும் முத்தரசநல்லூர் மற்றும் கூட்டுக்குடிநீர் திட்ட பகுதி காவிரி ஆற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும். இலவச விவசாய மின் திட்டம் வழங்க வேண்டும். தோட்டக்கலை பயிர்களுக்கு இலவச மின்சாரம் ரத்து என மின்வாரிய அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும். சேலம், நாமக்கல், திருச்சி வடக்குப்பகுதி மக்களை காப்பாற்ற காவிரி வெள்ள நீரை திருப்பிவிட வேண்டும். ஐயாற்றிலிருந்து திருத்தியமலை ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும்' என்பன உள்பட பல்வேறு கோரிக்கை வலியுறுத்தப்பட்டன.

**வே.பாளையம் விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:41 IST

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம், நொய்யல், புகளூர் சுற்றுப்புற பகுதியில் மஞ்சள் கிழங்கு, சிறிய வெங்காயம் நடவு செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது. ஊடுபயிர் வெங்காயத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளதால், விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி துவக்கியுள்ளனர்.
மஞ்சள் கிழங்கு மற்றும் விரளி மஞ்சள் விலை உயர்ந்து கொண்டேயிருப்பதால், காவிரி பாசனம் பகுதியில் மஞ்சள் விளைச்சலின் முக்கிய இடமாக உள்ள ஈரோடு மாவட்டத்தை தொடர்ந்து, கடந்த ஆண்டு முதல் கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம் சுற்றியுள்ள நொய்யல் முதல் புகளூர் பகுதி வரை மஞ்சள் சாகுபடி துவங்கப்பட்டுள்ளது.
மஞ்சள் விவசாயி கணேசன் கூறியதாவது: மஞ்சள் தற்போது நல்லவிலைக்கு விற்கப்படுவதாலும், இப்பகுதி மஞ்சள் தரம் குறையாமல் செழிப்பாக வளர்வதாலும்,

மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும், இதன் இடைவெளியில், ஊடுபயிராக சிறிய ரக நாட்டு வெங்காயம் நடவு செய்யப்படுகிறது. தற்போது, இந்த வெங்காயத்துக்கும் மார்க்கெட்டில் நல்ல விலை உள்ளதால், கூடுதல் பயனடையமுடிகிறது. இருபயிருடைய அறுவடைக்காலம் ஒரே குறிப்பிட்ட கால அளவில் உள்ளதால், முதலில் வெங்காயம் அறுவை செய்யப்படுகிறது. வெங்காயம் விற்பனை மூலம் கிடைக்கும் தொகைமூலம் மஞ்சள் கிழங்கு அறுவடை செய்து விற்பனைக்கு பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. மஞ்சளின் வரும் நிகரலாபம் கணிசமாக கிடைப்பதால், விவசாயிகள் இடையே இதற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**அதிக மகசூல் பெற செம்மை நெல் சாகுபடி : வேளாண் உதவி இயக்குனர் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:40 IST

குளித்தலை: "குறைந்த செலவில் அதிக மகசூல் பெற செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்ற வேண்டும்' என, விவசாயிகளுக்கு வேளாண் உதவி இயக்குனர்(பொ) காதர்மொய்தீன் அறிவித்துள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: தோகமலை வட்டாரத்தில் நெல் சாகுபடியில் இடுபொருள் செலவு அதிகரிப்பதால், சாகுபடி பரப்பளவு குறைகிறது. இதனால் புதிய தொழில் நுட்பத்தில் குறைந்த இடுபொருளை கொண்டு, அதிக லாபம் பெற செம்மை நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில் ஒரு ஏக்கர் நடவு செய்ய 3 கிலோ விதை போதுமானது. விதையை 24 மணி நேரம் நீரில் ஊற வைத்து, 24 மணி நேரம் இருட்டறையில் வைத்து முளை கட்ட வேண்டும். விதைக்கும் முன் முளை கட்டிய விதையை ஒரு பாக்கெட் 200 கிராம் அசோஸ்பைரில்லம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரம் மற்றும் 30 கிராம் சூடோமோனஸ் புளூரோசன்ஸ் உயிர் பூசணை கொல்லி மூலம் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

இதனால், முளைப்பு திறன் அதிகரித்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும். ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் நாற்றுமேடை அமைக்க வேண்டும். நாற்று மேடை வயல் மண் குப்பை மற்றும் 750 கிராம் டிஏபி ஆகியவற்றை கலந்து மே டை மேல் படுக்கை அமைக்க வேண்டும். இந்த நாற்று மேடையில் முனைகட்டிய விதையை பரவலாக விதைத்து வழக்கமான முறையில் பராமரிக்க வேண்டும். 14 நாள் வயதுடைய நன்கு வளர்ந்த நெல் உறையுடன் கூடிய நாற்றுக்களாக இருக்க வேண்டும். நாற்று பறிக்கும்

போது தனியாக அடுக்காமல் கட்டாக எடுத்து வயலில் நடவுக்கு வசதியாக ஆங்காங்கே வைக்க வேண்டும்.

நடவுக்கு 10 நாட்களுக்கு முன், ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட்டு சோறு உழவு செய்ய வேண்டும். இளம் நாற்றுக்களை வேர் அறுபடாமல் ஒவ்வொரு நாற்றாக பிரித்து வைக்க வேண்டும். நாற்றுக்களை 15 முதல் 30 நிமிடத்துக்குள் காய்ந்து விடாமல் நடவு செய்ய வேண்டும்.

நாற்றுகளை 25க்கு 25 என சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். நட்டப்பின் பரிந்துரைக்கப்பட்ட தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இட வேண்டும். நாற்று நட்டு 15 நாளில் கோணாவீடர் கருவி மூலம் பயிரின் ஊடேகுறுக்கும், நெடுக்குமாக உழவு செய்ய வேண்டும். 10 நாளுக்கு ஒரு முறை பயிரின் நிறத்துக்கு ஒப்பிட்டு தழைச்சத்து இட வேண்டும். வண்ண அட்டையை இலையின் நிறந்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது தேவையான குறியீட்டுக்கு கீழ் இருந்தால் குறுவை பருவத்துக்கு ஏக்கருக்கு 31 கிலோ யூரியாவும், சம்பா பருவத்துக்கு 26 கிலோ யூரியாவும் இட வேண்டும். இந்த முறையை கடைப்பிடிப்பதால் நெல்லில் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கரூர் உழவர்சந்தையில் 730 டன் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:51 IST

கரூர்: "கரூர் உழவர்சந்தையில் ஆகஸ்டில் 730 டன் காய்கறி விற்பனை செய்யப்பட்டுள்ளது' என, உழவர்சந்தை நிர்வாக அலுவலர் கணேசன், உதவி அலுவலர் மகாவிஷ்ணன் அறிவித்துள்ளனர்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், அரவக்குறிச்சி ஆகிய பகுதிகளில் உழவர்சந்தை செயல்படுகிறது. கரூர் உழவர்சந்தையில் தினசரி 20 டன் காய்கறி சராசரியாக விற்பனை செய்யப்படுகிறது. 90 விவசாயிகள் கடை அமைத்து தங்கள் விளைபொருட்களை கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். பண்டிகை நாட்களில் 25 டன் வரை காய்கறி விற்பனை செய்யப்படுகிறது. ஆகஸ்டில் கரூர் உழவர்சந்தையில் 730 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. இதன் மதிப்பு 95 லட்சம் ரூபாய். 5,700 விவசாயிகள் பொருட்களை விற்பனை செய்துள்ளனர். நுகர்வோர் 1.46 லட்சம் பேர் சந்தைக்கு

வந்துள்ளனர். உழவர்சந்தையில் தற்போது நெல்லிக்காய், மாங்காய் வரத்து அதிகரித்துள்ளதால், நெல்லிக்காய் கிலோ 25க்கும், மாங்காய் கிலோ 40க்கும், கொய்யா 18க்கும், சோளக்கதிர் 10 ரூபாய்க்கும், காலிபிளவர் 12க்கும், எலுமிச்சை 2 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**இலவச மோட்டார் வழங்கும் திட்ட கலந்தாய்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:48 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில் இலவச மின்மோட்டார் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இலவச மின்மோட்டார் திட்டம் தொடர்பாக நாளை செப்., 9ம் தேதி மாலை 3.30 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமையில் விவசாய பெருமக்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடக்கிறது. இக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் அனைவரும் பங்கேற்று ஆலோசனை தெரிவிக்கலாம்

**விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:08 IST

மதுரை : பருப்பு விலையை குறைக்க, தமிழகத்தில் 3200 ஏக்கரில் அனைத்து வித பயறுகளையும் பயிரிட, விவசாயிகளுடன் மத்திய அரசு, உலக வங்கி மற்றும் டாடா நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளன. இதன்மூலம் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

இந்தியாவில் பருப்பு விளைச்சல் குறைவாக இருப்பதால், கனடா, ஆஸ்திரேலியா, மியான்மர் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கான வரி, போக்குவரத்து செலவு போன்ற காரணங்களால் பருப்பு விலை அதிகரிக்கிறது. இதை தவிர்க்க, உலக வங்கி, மத்திய அரசு மற்றும் டாடா நிறுவனம் இணைந்து நடவடிக்கை

எடுத்துள்ளன. இதன்படி, பஞ்சாப் மற்றும் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3200 ஏக்கர் பாசன நிலங்களை தேர்வு செய்துள்ளனர். அனைத்து வித பயிர்களையும் பயிரிட, விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் செய்ய உள்ளனர். இதுதொடர்பாக விவசாயிகளிடம் டாடா நிறுவனம் சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு நிச்சயம் 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

**தாண்டிக்குடியில் பீன்ஸ் விளைச்சல் பாதிப்பு**

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பல ஏக்கரில் முருங்கை பீன்ஸ் பயிரிடப்பட்டது. காக்கி, வெள்ளை, மஞ்சள் முருங்கை பீன்ஸ் வகைகள் இதில் அடங் கும். கொடியாக வளரும் தன்மை கொண்ட இதற்கு பந்தல் அமைப்பு தேவை. மூன்று மாதத்தில் காய்கள் பறிக்க தயாராகிவிடும்.  தற்போது மலைப்பகுதியில் நீடிக்கும் தொடர் மழையால் பூஞ்சாண நோய் பயிரில் தாக்கியுள்ளதால் விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளது.  இருந்தபோதிலும் பறிக் கப்பட்ட பீன்ஸ் மதுரை, திண்டுக்கல், திருச்சி, ஒட் டன்சத்திரம் மார்கெட்களுக்கு அனுப் பப்படுகிறது. தற்போது 10 கிலோ., ரூ.300 முதல் 350 வரை விற்கப்படுகிறது. விளைச் சல் பாதித்த நிலையில் விலை உயர்வு விவசாயிகளுக்கு ஆறுதலை அளித் துள்ளது.

**ரூ. 2 கோடியில் திராட்சைக்கு ஏல மையம் அமைக்க முடிவு**

கம்பம்: இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் காமயகவுண் டன்பட்டியில் திராட்சைக்கு ஏல மையம் அமைக்க தமிழ்நாடு விளை பொருள் விற்பனை வாரியம் முடிவு செய்துள்ளது. தேனி மாவட்டத்தில் ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. சமீபத்தில் திராட்சை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் காமயகவுண்டன்பட்டியில் திராட்சைக்கென ஏல மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள் ளது.  இந்த மையம் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது.  இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்படும் இந்த மையத்தில் பெரிய அளவில் குளிர்சாதன கிட்டங்கி, பழத்தை ஏலம் விட தனி ஹால், பாங்கிங் வசதி, ஏலம் கேட்க வியாபாரிகள் அமரும் வசதி, மார்க்கெட்டிங் வசதி, வட மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் விலை நிலவரம் தெரிவிக்கும் வசதி, தோட்டக்கலைத்துறையின் தொழில்நுட்ப பிரிவு, விவசாயிகள் ஓய்வு எடுக்க அறை, இருப்பு வைத்துள்ள பழத்திற்கு கடன் பெறும் வசதி, கேன்டீன் உள்ளிட்ட பல வசதிகள்

இருக்கும்.  ஏல மையம் அமைக்கும் பணி தமிழ்நாடு விளைபொருள் விற்பனை வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

**தடுப்புச்சுவர் இல்லாத கிணறு:விவசாயிகளுக்கு எச்சரிக்கை**

தேனி:விவசாயிகள் தங்களின் கிணறுகளுக்கு தடுப்புச்சுவர் அமைத்து பாதுகாப் பாக வைத்துக் கொள்ள வேண்டும். விபத்து ஏற்பட்டால் சம்மந்தப் பட்ட விவசாயிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பாலகிருஷ்ணன் எஸ்.பி., எச்சரித்துள்ளார். அவர் கூறியதாவது; கண்டமனூர் அருகே கணேசபுரத்தில் பூமிநாதன் என்பவரின் தோட்டத்தில் மின்மோட்டாரை இறக்கி வைக்க முயன்ற காட்டுராஜா, செல்வம் ஆகியோர் டிராக்டருடன் கிணற் றுக் குள் விழுந்து இறந்தனர்.இந்த கிணற்றில் தடுப்புச் சுவர் இல்லாததே விபத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களின் கிணற்றுக்கு உடனடியாக தடுப்புச்சுவர் கட்ட வேண்டும்.தடுப்புச்சுவர் கட்டாமல் இருக்கும் கிணற்றில் ஏதாவது விபத்து ஏற்பட் டாலோ, உயிர்சேதம் ஏற் பட்டாலோ சம்மந்தப் பட்ட கிணறு உரிமையாளர்கள் முழு பொறுப்பு ஏற்க வேண்டும். கிணறு உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**புதிய அணைக்கு ஆய்வு செய்ய எதிர்ப்பு:தமிழக விவசாயிகள் வழக்கு தொடர முடிவு**

கூடலூர்:பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்காக கேரள பொறியாளர் குழு ஆய்வு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக விவசாயிகள் வழக்கு தொடர முடிவு செய்துள்ளனர். பெரியாறு அணைப்பிரச்னை குறித்த வழக்குகள் சுப்ரீம் கோர்டில் நடந்து வரும் நிலையில், இதை கண்டு கொள்ளாமல் அணைக்கு அருகில் புதிய அணை கட்டுவதற்கான சர்வே பணியில் கேரள அரசு முழுவீச்சில் ஈடுபட்டு வருகிறது. இரண்டு கட்ட சர்வே பணியை முடித்து மூன்றாவது கட்ட சர்வே பணியை செய்து வருகிறது. புதிய அணைக்கான திட்ட மதிப்பீடு தயார் நிலையில் வைத்துள்ளது.

இரு மாநில பிரச்னையில், தன்னிச்சையான முடிவு எடுத்து அதை நடைமுறைப்படுத்தி வருவதற்கு தமிழக விவசாயிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். ஐந்து மாவட்ட விவசாய சங்க செயலாளர் கே.எம்.அப்பாஸ் கூறியதாவது; பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டக்கூடாது என்பதை முன்வைத்து தற்போது நடந்து வரும் ஆய்வை

உடனடியாக நிறுத்தக்கோரி விவசாய சங்கம் சார்பில் வழக்கு தொடர உள்ளோம். 1962 கேரள வனப்பாதுகாப்பு சட்டம், 1972 மத்திய அரசு வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், 1984 சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் ஆகிய சட்டங்களின் அடிப்படையில் அடர்ந்த வனப்பகுதியில் புதிய அணை கட்ட முடியாது.

இதே சட்டத்தைப் பயன்படுத்தி பெரியாறு அணையை தமிழக அரசு பலப்படுத்தும் போது கேரள அரசு பல்வேறு இடைஞ்சல்களை செய்துள்ளது. மேலும், பெரியாறு அணை அமைந்துள்ள பகுதி பூகம்பம் ஏற்படக்கூடியது என்ற வாதத்தையும் கேரள அரசு முன்பு கூறியுள்ளது. ஆனால், தற்போது கேரள அரசு இதையெல்லாம் மறைத்து புதிய அணை கட்டுவதாகக்கூறி பிரச்னையை அரசியலாக்கி தமிழக விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு உடனடியாக தீர்வு காண்பதற்கு ஐகோர்ட்டில் தலைமை வக்கீல்கள் லஜபதிராய், வேணுகோபால், ஐயம்பெருமாள் ஆகியோர் மூலம் விரைவில் வழக்கு தொடர உள்ளோம் என்றார்.

**விவசாயிகள் கூட்டம்**

நயினார்கோவில்: நயினார்கோவில் தோட்டக் கலைத்துறை மற்றும் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து வாழை சாகுபடி மற்றும் பின்சார் தொழில் நுட்பங்கள் குறித்து பாண்டியூரில் விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வேளாண்மை நிலைய வல்லுனர்கள் மீனாட்சி மற்றும் ஜெயந்திமாலா பயிற்சி அளித்ததுடன் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். தோட் டக் கலை உதவி இயக்குனர் சேகர் திட்டங்கள் பற்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி அலுவலர்கள் சாத்தையா, தங்கவேலு செய்திருந்தனர்.

**இலவச "பம்ப் செட்' திட்டம் கூடுதல் அவகாசம் தேவை**

சிவகங்கை: இலவச "பம்ப் செட்' க்கு விண்ணப்பிக்க கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும். மின்சார நுகர்வை குறைக்க, விவசாயிகளின் பழைய "பம்ப் செட்' களை மாற்றி, புதியவை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. மொத்தம் 19 லட்சம் விவசாய மின் இணைப்புகள் உள்ளன. இதில் 15 லட்சம் பேருக்கு இலவசமாகவும்; மீதமுள்ளோருக்கு 50 சதவீத மானியத்திலும் மின் மோட்டார் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் மின்வாரியம் மூலம் வழங்கப்படுகின்றன. அவசர கதி: இதில் உள்ள விபரங்களை பூர்த்தி செய்து, சிட்டா, அடங்கல் நகலுடன், இன்றுக்குள் வழங்க வேண்டும் என, விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவற்றை கம்ப்யூட்டரில்

பதிவு செய்து, வரும் 15 ம் தேதிக்குள், வாரியத்தினர் அனுப்ப வேண்டும். இன்றுடன் கெடு  முடியும் நிலையில், பெரும்பாலான சிறு விவசாயிகள் விண்ணப்பிக்கவில்லை. இவர்களுக்கு தமதமாக விண்ணப்பம் வினியோகிக்கப்பட்டது. வி.ஏ.ஓ., பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், சான்றுகள் பெற விவசாயிகள் பல மணி நேரம் காத்து கிடக்கின்றனர். இதனால் உரிய காலத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாது. இதுகுறித்து விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஆதிமூலம் கூறுகையில்,""விண்ணப்பங்கள் தற்போது தான் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. வி.ஏ.ஓ., நில ஆவண சான்று பெற தாமதம் ஆகிறது. இவற்றை சிறு விவசாயிகள் எளிதில் பெற முடியாது. விண்ணப்பங்களை சமர்ப்பிக்க  கூடுதல் அவகாசம் தேவை. விண்ணப்பத்தில் குறிப்பிடும்  குதிரை திறன் அளவில் மோட்டார் வழங்க வேண்டும். பழைய ஒயர்களுக்கு பதில் புதியவை வழங்க வேண்டும்," என்றார்.

**அதிக வரத்து இருந்தும் காய்கறி விலை உயர்வு; நுகர்வோர் ஏமாற்றம்**

சிவகங்கை: சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறிகள் வரத்து அதிகமாக இருந்த நிலையில், வியாபாரிகள் விலையை உயர்த்தி விற்றதால், நுகர்வோர் ஏமாற்றம் அடைந்தனர். சந்தையில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ):  கடந்த வாரம் 16க்கு விற்ற கத்தரிக்காய்- 24 ரூபாய்; வெண்டைக்காய் -20; 20 க்கு விற்ற பாகற்காய்- 24; 28 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 40; கேரட்- 20;   30க்கு விற்ற இஞ்சி- 40; 28க்கு விற்ற அவரைக்காய்- 40; பட்டர் பீன்ஸ்- 80; 12 க்கு விற்ற வெங்காயம்- 15- பெல்லாரி- 15; காலி பிளவர்- 20; சேணை கிழங்கு- 40; சேம்பு- 40; 20 க்கு விற்ற பச்சை மிளகாய்- 30; 20 க்கு விற்ற பீட்ரூட்- 24; நூக்கல் -20; சோயா பீன்ஸ்- 40; எலுமிச்சை- 25; பூசணி- 20; பீர்க்கை- 20; டர்னிப் -30; சீனி அவரை- 10; மல்லித்தழை- 15 ரூபாய். பழங்கள்: முதல் ரக ஆப்பிள் - 40, இரண்டாவது ரகம் 30; 80 க்கு விற்ற ஆரஞ்சு- 60; சப்போட்டா 16; 60 க்கு விற்ற வெள்ளை திராட்சை  50, கறுப்பு-40; 15 க்கு விற்ற பேரிக்காய்- 20; அன்னாசி- 20; மாதுளை முதல் ரகம்- 60, இரண்டாவது ரகம்- 40 ரூபாய். பருப்பு விலை உயர்வு: 68 க்கு விற்ற துவரம் பருப்பு-70; 46 க்கு விற்ற தட்டப்பயறு- 48; 36க்கு விற்ற கடலை பருப்பு- 38; 80 க்கு விற்ற உளுந்தம் பருப்பு- 86; கொண்ட கடலை- 36; 78 க்கு விற்ற பாசி பருப்பு- 80; 66 க்கு விற்ற பாசிப்பயறு- 67; மொச்சை பயறு- 48, வெள்ளை மொச்சை- 76; பட்டாணி- 28, வெள்ளை பட்டாணி- 24; மல்லி- 48; சாதா புளி - 48, நயம்- 52; பொரி கடலை 40; வத்தல் முதல் ரகம்- 67, இரண்டாவது ரகம்- 53; மலைப்பூண்டு- 240, தரப்பூண்டு- 120,

சாதா - 60; சோம்பு- 140; வெந்தயம் -52; கசகசா -290; சீரகம்- 190; கடுகு- 45; மிளகு -260 ரூபாய். அரிசி விலை (கிலோ): கல்சர் பொன்னி-32; டீலக்ஸ் பொன்னி- 28; ஐ.ஆர்., 20-20; செல்லப்பொன்னி- 23; பொன்னி பச்சரிசி- 32; பச்சரிசி- 21; இட்லி அரிசி- 21; கோதுமை- 22; சோளம்- 16; கம்பு- 18; கேப்பை- 16; வரகரிசி- 36 ரூபாய். எண்ணெய் விலை நிலவரம்: 1,000 ரூபாய்க்கு விற்ற 16 லிட்டர் டின் தேங்காய் எண்ணெய் 1,100 ஆக உயர்ந்துள்ளது; சில்லரை விலை லிட்டருக்கு, 80 லிருந்து 88 ஆக அதிகரித்துள்ளது. கடலை எண்ணெய் சில்லரை விலை 85 க்கு விற்கப்படுகிறது. 46 க்கு விற்ற பாமாயில் 48; நல்லெண்ணெய் 90 ரூபாய். முகூர்த்தம், விழாக்கள் வருவதால் எண்ணெய், பருப்பு விலை தொடர்ந்து உயர்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**நெல்லை மாவட்டத்தில் இலவச மின் மோட்டார் திட்டத்தை 6 மாதத்தில் செயல்படுத்திட முடிவு**

கடையநல்லூர் : தமிழக அரசின் இலவச மின்மோட்டார் திட்டதை நெல்லை மாவட்டத்தில் 6 மாதத்தில் செயல்படுத்திட மாவட்ட நிர்வாகம் முடிவு செய்திருப்பதாக கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார். கடையநல்லூரில் நேற்று மாலை தமிழக அரசின் இலவச மின்மோட்டார் மாற்றி கொடுக்கும் திட்டத்திற்கான விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் கலெக்டர் ஜெயராமன் தலைமையில் நடந்தது. கடையநல்லூர் மின்கோட்ட செயற்பொறியாளர் நடராஜன் வரவேற்றார். மாவட்ட மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் முத்துராமலிங்கம், மின்வாரிய செயற்பொறியாளர் (பொது) செல்வக்குமார் மற்றும் கடையநல்லூர் மின்கோட்டத் தில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கலந்தாய்வு கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் ஜெயராமன் பேசியதாவது: சென்னையில் கடந்த மாதம் நடத்தப்பட்ட கலெக்டர்கள் மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் முதல் கருத்தாக விவசாயிகள் இலவச மோட்டார் வழங்கும் திட்டம் எடுத்து கொள்ளப்பட்டது. தமிழகம் முழுவதும் விவசாயிகளிடம் இதற்கான கருத்துகளை கேட்டறிய முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் விவசாயிகளை அழைத்து தமிழக அரசால் வழங்கப்பட உள்ள இலவச மின்மோட்டார் திட்டத்தில் உள்ள ஐயப்பாடு, திட்டத்தில் உள்ள செயல்பாடு போன்றவைகள் கேட்டறியப்பட்டு வருகிறது. நெல்லை மாவட்டத்தில் 13 ஆயிரம் மின்மோட்டார் பம்பு செட்டுகள் வைத்துள்ள முதல் வட்டமாக கருதக்கூடிய கடையநல்லூரில் இந்த கலந்தாய்வு கூட்டம் நடத்தப்படுகிறது. இந்த திட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிக்கரமாகும் பட்சத்தில் "பவர்கட்' என்பது இருக்காது. விவசாயிகளால் தெரிவிக்கபடும் கருத்துகள் அனைத்தும் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். ஐந்தாண்டு திட்டமாக இந்த திட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை இலவச மின்மோட்டார் மாற்றியமைக்கும் திட்டத்தினை 6மாத காலத்திற்குள் முடித்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பழைய மாடல்களில் விவசாயிகள் பயன்படுத்தி வரும் மின்மோட்டார்கள் மாற்றித்தரப்படும்.இவ்வாறு கலெக்டர் ஜெயராமன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் முத்துராமலிங்கம் பேசியதாவது: தமிழக அரசின் இலவச மின் மோட்டார் திட்டத்தினை பொறுத்தவரை விவசாயிகள் 3 எச்பி., 5 எச்பி., பயன்படுத்தினால் கூட அதே சக்தி கொண்ட மின்மோட்டார் வழங்கப்படும். அரசால் வழங்கப்பட்டுள்ள மிகப்பெரிய திட்டமான இத்திட்டத்திற்கு விவசாயிகள் முழுமையான ஒத்துழைப்பை தரவேண்டும். நெல்லை மாவட்டத்தில் 77 ஆயிரம் மின் மோட்டார் பம்பு செட்கள் அமைந்துள்ளன. இவற்றில் கடையநல்லூர் கோட்டத்தில் மட்டும் 13 ஆயிரம் மின்மோட்டார்களும், சங்கரன்கோவிலில் 12 ஆயிரம் மின்மோட்டார் பம்பு செட்களும் விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய மின்மோட்டார் வழங்கப்படுவதற்கான காரணமே மின் உற்பத்தியை பெருக்குவதற்குதான். தமிழகத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 33 சதவீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

கலந்தாய்வு கூட்டத்தில் கடையநல்லூர் நகராட்சி தலைவர் இப்ராகிம், கடையநல்லூர் உதவி கோட்ட பொறியாளர் திருமலைக்குமாரசாமி, யூனியன் பிடிஓ மோகன், வருவாய் ஆய்வாளர் ஆதிநாராயணன், நகராட்சி கமிஷனர் அப்துல்லத்தீப் மற்றும் மின்வாரிய செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இலவச மின்மோட்டாருக்கு உத்தரவாதம் உண்டு: கடையநல்லூரில் நேற்று நடந்த இலவச மின்மோட்டார் தொடர்பான கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயி ஒருவர், ""அரசால் வழங்கப்படும் இலவச மின்மோட்டார் திட்டத்தில் விவசாயிகளுக்கு மோட்டார் வழங்கிய பிறகு அதில் பழுது ஏற்பட்டால் அதற்கான உத்தரவாதம் என்ன"

என்றார். இதற்கு பதிலளித்த கலெக்டர், ""ஒரு கார் வாங்கினாலும் கேரண்டி உண்டு. இதுமட்டுமின்றி இப்போதெல்லாம் எந்த பொருட்கள் வாங்கினாலும் கேரண்டி தருகிறார்கள். அதுபோன்று தமிழக அரசால் வழங்கப்பட உள்ள இலவச மின்மோட்டார் திட்டத்தில் மோட்டார் பழுதடைந்தால் நிச்சயமாக அதற்கான கேரண்டி வழங்கப்படும். அந்த உற்பத்தி நிறுவனம் சார்பில் இரண்டு வருட உத்தரவாதம் வழங்கப்படுகிறது. ஏற்கனவே தமிழக அரசு இலவச கலர் "டிவி' திட்டத்தில் "டிவி' பழுதடைந்தால் அதற்கான பழுதுநீக்கம் செய்யும் பணி உடனடியாக செய்து கொடுக்கப்படுகிறது. 3 எச்சி., என்றாலும், 5 எச்பி., மோட்டார் வைத்திருந்தாலும் மோட்டாருக்கான உத்தரவாதம் இரண்டு ஆண்டு நிச்சயமாக உண்டு'' என குறிப்பிட்டார் கலெக்டர்.

**கடையநல்லூர் பகுதியில் தக்காளி விற்பனை ஜோர்**

கடையநல்லூர் : கடையநல்லூர் வட்டார பகுதிகளில் தக்காளி சீசன் துவங்கிவிட்டதை அடுத்து தக்காளி மார்க்கெட் களைகட்டியுள்ளது. கிலோ 4 ரூபாயில் இருந்து 5 ரூபாய் வரை விற்கப்படுகிறது.தமிழகத்தில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் தக்காளி சீசனுக்கு புகழ்பெற்ற பகுதியாக கடையநல்லூர் விளங்குகிறது. இப்பகுதியை சுற்றி அமைந்துள்ள மேலக்கடையநல்லூர், காசிதர்மம், கம்பனேரி, கரடிகுளம், வலசை, பாலஅருணாசலபுரம், புதுக்குடி, மாவடிக்கால், இடைகால் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பல ஏக்கர் விளைநிலங்களில் தக்காளி சாகுபடிகள் செய்யப்படுவதுண்டு. இப்பகுதிகளில் விளைச்சல் பெறும் தக்காளி மதுரை, சேலம், திண்டுக்கல், கரூர், ஈரோடு, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், கேரளா, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

இதன்படி இந்தாண்டு தக்காளி சீசன் துவங்கிவிட்டதை அடுத்து தக்காளி மார்க்கெட் வியாபாரம் களைகட்டி காணப்படுகிறது. காலை 10 மணி முதல் கூடை கூடையாக விளைந்த தக்காளிகளை விவசாயிகள் மார்க்கெட்டிற்கு இரண்டு சக்கர வாகனங்களிலும், லோடு ஆட்டோகளிலும் கொண்டு வந்த வண்ணம் உள்ளனர். இதனால் தக்காளி வரத்து அதிகமாக காணப்படுவதை அடுத்து நேற்றைய நிலவரப்படி தக்காளி விலை கிலோ ஒன்றிற்கு 4 ரூபாயிலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நல்ல தரத்திலான தக்காளி 5 ரூபாய் வரை விற்கப்படுவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து அதிகமாகும் என்பதால் இன்னும் சில நாட்களில் கிலோ தக்காளி இரண்டு ரூபாய் வரை விற்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பேய்க்குளம்: பேய்க்குளத்தில் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் கருமேனி ஆறு உப வடிநில பகுதி விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி ஸ்ரீவெங்கடேஸ்வரபுரத்தில் நடந்தது. கூட்டத்திற்கு ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் நெல் விளைபொருள் உற்பத்தியாளர் குழு தலைவர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் பஞ்., தலைவர் விஜயலெட்சுமி ஸ்ரீதர் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் மணிகண்டன் வரவேற்றார்.

தூத்துக்குடி மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் முருகானந்தம் நெல் மற்றும் நிலக்கடலை பயிர்களின் அறுவடை, பின் செய் நேர்த்தி தொழில் நுட்பம் குறித்தும், நிலக்கடலை, நெல் சாகுபடியில் நுண் ஊட்ட சத்துக்கள் இடுவதால் கூடுதல் மகசூல் கிடைப்பது குறித்தும் பேசினார். கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் சீனிவாசன் செம்மை நெல் சாகுபடி குறித்தும், ஸ்காட் வேளாண்மை அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் அசோக்குமார், நிலக்கடலை பயிரில் மகசூலை அதிகரிப்பது குறித்தும், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் சேர்மராஜன் கடலை சாகுபடியில் தெளிப்புநீர் பாசனத்திற்கு 65 சதவீத மானியம் வழங்கப்படுவது குறித்தும் பேசினர். வேளாண்மை அலுவலர் திருச்செல்வம் வேளாண்மை திட்டங்கள் குறித்து பேசினார். மேலும் வேளாண்மை அலுவலர்கள் சங்கர், ராஜா, கதிரேசன், அகிலா, சரவணகுமார் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் திருப்பதி நன்றி கூறினார்

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவிலில் வேளாண் அலுவலர் இல்லாததால் சம்பா சாகுபடியை துவங்க உள்ள நிலையில் ஆலோசனைகள் பெற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.
கடலூர் மாவட்டத்தில் பயிர் உற்பத்தியில் சிறந்து விளங்கி வருவது சிதம்பரம், குமராட்சி, காட்டுமன் னார்கோவில் பகுதிகளாகும். காவிரி கடை மடையான இப்பகுதியில் சுமார் 70 ஆயிரம் ஏக்கரில் நெல், உளுந்து, கரும்பு பயிரிடப் பட்டு வருகிறது. பெரும் பாலும் நெற் பயிரையே விவசாயிகள் நம்பியுள்ளனர். பாதிப் பின்றி நல்ல மகசூல் பெற

விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்களின் ஆலோசனை அவசியம் தேவைப்படுகிறது. அதற்காக அந்தந்த பகுதியில் வேளாண் அலுவலர்கள் உள்ளனர்.

வேளாண் அலுவலர்கள் விவசாயிகளிடம் நேரடியாக சென்று அரசு திட்டங் கள், பல்வேறு மானியங் கள், விதைகள், பருவ நிலை மாற்றத்திற்கேற்ப பயிர்களை காக்க ஆலோசனை வழங்கி வருகின்றனர். ஆனால் காட்டுமன் னார்கோவிலில் கடந்த சில மாதங்களாக வேளாண் அலுவலர் இல் லாததால் விவசாயிகள் ஆலோசனை பெற முடியாமல் தவித்து வருகின்றனர். இங்கு பணியாற்றிய உதவி வேளாண் இயக்குனர் கணேசன் சில மாதங்களுக்கு முன் பதவி உயர்வு பெற்று சென்றதையடுத்து அந்த இடம் காலியாக உள்ளது.

குமராட்சி உதவி வேளாண் இயக்குனர் லட் சுமணன் கூடுதல் பொறுப் பாக கவனித்து வருகிறார். காட்டுமன்னார்கோவில் பகுதி வேளாண் துறை ஸ்ரீமுஷ்ணம் வரை பல் வேறு விவசாய பணிகளை மேற்கொண்டு வருவதாலும், குமராட்சியிலும் தொடர்ந்து வேளாண் அலுவலர் இருக்க வேண் டிய கட்டாயம் இருப்பதாலும் ஒரு அதிகாரி மட்டும் பல் வேறு பகுதிகளுக்கு சென்று விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட் டுள்ளது. எனவே காட்டுமன்னார்கோவிலில் காலியாக உள்ள உதவி வேளாண் அலுவலர் பணியிடத்தை நிரப்ப வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**மரக்கன்று நடும் விழா**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,01:07 IST

சிதம்பரம் : சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கடவாச்சேரி கிராமத்தில் மரக் கன்று நடும் விழா நடந்தது.

மாவட்ட வன அதிகாரியின் உத்தரவுபடி மரக்க ன்று நடும் விழா நட ந்தது. சிதம்பரம் வன அலுவலர் விஜயன் தொடங்கி வைத்தார். வன காப்பாளர் முருகேசன் உள்ளிட்டோர் பங் கேற்றனர். 20 லட்சம் தேக்கு கன்றுகள் உப்பனாற்றங்கரையில் 18 கி.மீ., நீளத்திற்கு நடுவதற்கு உத்தேசிக்கப்பட் டுள்ள நிலையில் கடவாச்சேரியில் மரக்கன்றுகள் நடப்பட்டது.

**சேலத்தில் பூத்தது இரவில் மலரும் அனந்த சயன பூ**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:29 IST

சேலம்: சேலத்தில் பூ வியாபாரி ஒருவரின் வீட்டில், இரவில் பூக்கும் நிஷாகந்தி பூக்கள் மலர்ந்துள்ளன. கேரளா, ஊட்டி, கோவை போன்ற குளிர் பிரதேசங்களில் மட்டுமே வளரும் தன்மை கொண்ட நிஷாகந்தி செடிகளில் ஆண்டுக்கு ஒரு முறை பூக்கள் பூக்கிறது. ஆவாணி மாதத்தில், வெண்மை நிறத்தில் அதிக வாசனையுடன் இரவில் மட்டுமே பூக்கும் மலர்களை, "அனந்த சயனப் பூ' என்று சேலம் மக்கள் அழைக்கின்றனர். இந்த பூக்கள் இரவு சுமார் 9 மணிக்கு மேல் பூத்து அதிகாலை 4 மணிக்குள் வாடி விடுகின்றன. பூக்களில் விஷ்ணு பாம்பு படுக்கை சயனத்திருப்பது போன்ற தோற்றம் இருப்பதால், அனந்த சயனப் பூ என அழைப்பதாக கூறுகின்றனர். சேலம் செர்ணபுரி அருகே ராம்நகரை சேர்ந்த பூ வியாபாரி கணேசன்(34) என்பவர் வீட்டில் வளர்க்கும் செடியில் மலர்ந்துள்ள அனந்த சயனப் பூக்களை அப்பகுதியில் உள்ள பொதுமக்கள், குழந்தைகள் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர். இது குறித்து கணேசன் கூறியதாவது: ஒரு செடியில் 60 முதல் 70 பூக்கள் பூக்கும். கடந்த ஆண்டு ஒரு செடியில் 37 பூக்கள் மலர்ந்தது. நடப்பாண்டில், மழை குறைவாக பெய்ததால், 6 பூக்கள் மட்டுமே மலர்ந்துள்ளது. செடியில் உள்ள இலைகளில் இருந்து பூக்கள் மலர்கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

**செம்மை நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 3 கிலோ விதை: உதவி இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:41 IST

ராசிபுரம்: "செம்மை நெல் சாகுபடி முறையில் ஒரு ஏக்கருக்கு மூன்று கிலோ விதைகள் மட்டுமே போதும்' என, வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கடந்த சில ஆண்டுகளாக போதுமான மழையின்மை மற்றும் நிலத்தடி நீர் குறைவு போன்ற காரணங்களால், நெல் பயிருக்கு தேவையான நீர் ஆதாரங்கள் குறைந்துவிட்டது. மேலம், விவசாய தொழிலாளர்களின் பற்றாக்குறை

மற்றும் கூலி உயர்வு, வேளாண் இடுபொருட்களின் விலை உயர்வு ஆகியவையும் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை பாதித்துள்ளது. எனவே, நெல் சாகுபடியில் தொழில்நுட்பங்களை கையாண்டு குறைந்த இடுபொருள் செலவில், நெல் சாகுபடியை லாபகரமானதொரு தொழிலாக மாற்ற முடியும். "செம்மை நெல் சாகுபடி' முறையில் ஒரு ஏக்கர் நடவு செய்ய மூன்று கிலோ விதை மட்டும் போதுமானது. அந்த விதையை ஒரு செண்ட் நாற்றங்காலில் விதைத்து நல்ல வாளிப்பான நாற்றுகளை உற்பத்தி செய்ய வேண்டும். 14 நாட்களான இளம் நாற்றை நடவு செய்ய உபயோகிக்க வேண்டும். அதனால் வேர்களில் வளர்ச்சி அதிகமாகி அதிக தூர்கள் வெடிக்கும். குத்துக்கு ஒரு நாற்று வீதம் அதிகம் இடைவெளிவிட்டு சதுர நடவு முறையில் நடவு செய்ய வேண்டும்.

நடவு செய்த 10ம் நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் நான்குமுறை ரோட்டோ வீடர் அல்லது கோனோ வீடர் கருவி கொண்டு களைகளை அமுக்கி சேற்றை கலக்க வேண்டும். அதனால் வேர்களின் வளர்ச்சி அதகரித்து அதிக தூர்கள் வெடிக்கும். ஊட்டச்சத்துகளை உபயோகிக்கும் திறன் அதிகரிக்கும். மேலும், மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து வேரின் துரித வளர்ச்சிக்கு உதவுகிறது. நீர் மறைய நீர்கட்டி பாசன நீரின் அளவை குறைவாக பயன்படுத்தினால் போதுமானது. அதனால், அதிக கதிர்கள், திரட்சியான நெல்மணிகள் கிடைக்கும். அதன்மூலம் அதிக மகசூல் பெறமுடியும். எனவே, அனைத்து விவசாயிகளும் சம்பா பருவத்துக்கு அதிக மகசூல் தரக்கூடிய செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை கையாண்டு பயன்பெறலாம். எலச்சிபாளையம் மற்றும் வேலகவுண்டம்பட்டி வேளாண் விரிவாக்க மையங்களில் ஜி.ஆர். 20 நெல் சான்று பெற்ற விதைகள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ விதை 5 ரூபாய் மானிய விலையில் வினியோகம் செய்யப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தர்மபுரி மாவட்டத்தில் 900 ஏக்கரில் விரைவில் "சிப்காட்': கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:29 IST

தர்மபுரி: ""தர்மபுரி மாவட்டத்தில் 900 ஏக்கரில் விரைவில் சிப்காட் அமைக்கப்படும்'' என கலெக்டர் அமுதா தெரிவித்தார்.

நிருபர்களிடம் அவர் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்துக்கு மாற்றுதிறனாளிகள் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றியதற்காக அரசு விருது மற்றும் சான்றிதழை முதல்வர் கருணாநிதி வழங்கினார். கொடி நாள் வசூலில் அதிக வசூலித்தமைக்கு கவர்னர் பாராட்டு சான்று வழங்கினார். பொதுமக்களின் ஒத்துழைப்பு காரணமாக இந்த விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற முடிந்தது. தர்மபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி இல்லாததால், அண்டை மாநிலத்துக்கு வேலை வாய்ப்புக்கு செல்லும் நிலையுள்ளது. மாவட்ட நிர்வாகம், தொழில் வளர்ச்சி துறையும் இணைந்து தர்மபுரி மாவட்டத்தில் சிப்காட் அமைத்து தொழில் துவங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாய நிலங்களை தவிர்த்து 900 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்து தமிழக அரசின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்படும். மத்திய அரசின் பாதுகாப்பு துறை பணிமனை அமைக்க இடம் கேட்டுள்ளனர். 700 ஏக்கர் முதல் 1,000 ஏக்கர் வரையில் நிலம் கேட்டுள்ளனர். இதற்கான நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலம் தேர்வானால், 4,000 கோடி முதல் 5,000 கோடி வரையில் பணிமனை அமைக்கப்படும். நம் மாவட்டத்தை சேர்ந்த 15,000 முதல் 20,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

தர்மபுரி மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை, டாக்டர்கள் பற்றாக்குறை உள்ளது. பெரும்பாலும் நம் மாவட்டத்தில் உள்ள மலை கிராமங்களில் பணிபுரிய விரும்புவதில்லை. இதை போக்க மாநில அரசு கமிட்டி அமைத்துள்ளது. இந்த கமிட்டி மலைக்கிராமங்களில் பணிபுரிவோருக்கு உரிய பதவி உயர்வு, சம்பள உயர்வு வழங்கிட முடிவு எடுப்பார்கள். மாவட்டத்தில் 18,725 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். இவர்களில் 1,092 பேருக்கு உதவி தொகை, 692 பேருக்கு கல்வி உதவித்தொகை 7 லட்ச ரூபாய், 784 பேருக்கு பஸ் பாஸ், ஒரு கோடியே 50 லட்ச ரூபாய் பராமரிப்பு தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. 4,000 மாற்றுத் திறனாளி குழந்தைகள் பள்ளி படித்து வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சொட்டு நீர் பாசன முறை: விவசாயிகளுக்கு 65% மானியம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,02:24 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர்வள நிலவள திட்டம் செயல்படுத்தும் பகுதி விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2010--&11ம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் கிருஷ்ணகிரி அணை வரையிலான பெண்ணையாறு வடிநிலப்பகுதி மற்றும் மார்கண்டேய நதி வடிநிலப்பகுதி ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் செயல்படுத்தப்படவுள்ளது. கீழ் பெண்ணையாறு வடிநிலப்பகுதியில் உள்ள கொடியாலம் அணைக்கட்டு, கெலவரப்பள்ளி நீர்தேக்கம் முதல் கிருஷ்ணகிரி அணை வரை உள்ள அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் நீர்பாசன பகுதிகளிலும் நீர்வடிப்பகுதிகளிலும் மற்றும் மார்கண்டேய நதி வடிநிலப்பகுதியில் உள்ள நாயக்கன் அணைக்கட்டு, சிகரலப்பள்ளி அணைக்கட்டு, கொல்லப்பட்டி அணைக்கட்டு, பீமாண்டப்பள்ளி அணைக்கட்டு, சிங்கிரிப்பள்ளி அணைக்கட்டு, நாச்சிகுப்பம், தடதடா, தாசிரிப்பள்ளி அணைக்கட்டுகள், எட்டிப்பள்ளி ஏரி, பீமாண்டபள்ளி ஏரி, திம்மம்மாசெரு ஏரி ஆகியவற்றின் நீர்பாசன மற்றும் நீர் வடிப்பகுதிகளிலும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் அமைக்க 65 சதவீதம் மானியம் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

மானிய தொகை போக மீதமுள்ள விவசாயிகள் பங்களிப்பு தொகைக்கு வங்கி நிபந்தனைக்குட்பட்டு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத்தரப்படும். தகுதியுள்ள சூளகிரி, ஓசூர் வட்டார பெண்ணையாறு வடி நிலப்பகுதி விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னத்தூர் போஸ்ட், ஓசூர்' என்ற முகவரியில் அணுக வேண்டும். கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, காவேரிப்பட்டணம் வட்டார பெண்ணையாறு வடிநிலப்பகுதி விவசாயிகள் மற்றும் வேப்பனப்பள்ளி வட்டார மார்க்கண்டேய நதி வடிநிலப்பகுதி விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, மூன்றாவது குறுக்கு தெரு, கோ-ஆஃப்ரேடிவ் காலனி, கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும் அணுகி விண்ணப்பிக்கலாம்.

**நாட்டுக்கோழியை பண்ணையில் வளர்த்தால் அதிக எடையுடன் லாபம்**

ஈரோடு: ""மேய்ச்சல் நிலங்களில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளை விட பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள் சமச்சீர் உணவுடன் மூன்று மாதத்தில் நல்ல எடையை தருகிறது,'' என, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய டாக்டர் கூறியுள்ளார். ஈரோடு மாவட்டத்தில் 106 முட்டை கோழி பண்ணைகளில் 41.38 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 1,197 கறிக்கோழி பண்ணைகளில் 63.9 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. பெருந்துறை, ஈரோடு பகுதியில் முட்டை கோழி பண்ணைகளும், காங்கேயம், தாராபுரம், மூலனூர் பகுதிகளில் கறிக்கோழி பண்ணைகளும் அதிகளவில் உள்ளன. முன்பெல்லாம் கிராமபுறத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு அதிகமிருந்தது. வீட்டுக்கு பத்து முதல் 15 கோழிகள் வளர்க்கப்பட்டன. இந்த கோழிகள் பெரும்பாலும் வேளாண் நிலத்தில் கிடக்கும் தானியங்கள், புழு, பூச்சிகளை உண்டு வாழ்ந்தன. ஆண்டுக்கு 60 முட்டைகள் வரை உற்பத்தி செய்தன. இப்போது பிராய்லர் கோழிகளைப் போல், நாட்டுக் கோழிகள் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 13க்கும் மேற்பட்ட நாட்டுக்கோழி பண்ணைகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுக் கோழிகள் உள்ளன. இங்குள்ள பண்ணைகளில் தாய்க்கோழி மூலம் மூட்டைகள் மற்றும் குஞ்சுகள் (சிட்ஸ்) உற்பத்தி செய்யப்படுகிறது. முட்டைக்காக வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளுக்கு இரண்டு சதுர அடியிடம் போதுமானது. இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிக்கு ஒரு சதுரஅடி இடம் போதுமானது. பிராய்லர் கோழியை விட நாட்டுக்கோழி இறைச்சியில் சுவை அதிகம். நாட்டுக்கோழிக்கு தீவனச் செலவும் குறைவுதான். நாட்டுக்கோழிகள் "வெள்ளை கழிச்சல்' நோயால் மட்டுமே அதிகம் பாதிக்கப்படும். அவற்றை தடுக்க மாவட்ட கால்நடை மருத்துவமனையில் பிரதிவாரம் சனிக்கிழமை தடுப்பூசி போடப்படுகிறது. கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் டாக்டர் தனசீலன் கூறியதாவது: நாட்டுக்கோழிகளை இருமுறையில் வளர்க்கலாம். ஒன்று தரையில் உமி போட்டு வளர்க்கலாம். மற்றொன்று கூண்டுக்குள் வளர்க்கலாம். நாட்டுக்கோழிக்கு சாதாரணமாக சமச்சீர் உணவு கொடுத்து வளர்த்தால் ஐந்து மாதத்தில் 1.300 கிலோ முதல் 1.400 கிலோ வரை எடை கிடைக்கும்.

உணவு தேட ஒரு கோழி நாள் முழுக்க காடு, மேடு என அலைந்து திரிந்து தனது சக்தியை விரயம் செய்ய வேண்டி வரும். ஆனால், பண்ணையில் வளர்க்கும் நாட்டுக் கோழிகள் அப்படியல்ல; தேவையான அளவு சமச்சீர் உணவு கொடுத்து பராமரித்தால் மூன்று

மாதத்தில் அதே எடைக்கு வந்து விடும். நல்ல விலையும் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**அரசு சார்பில் 5,360 டன் புதிய நெல் கொள்முதல் கூடுதல் நிலையம் திறக்க நடவடிக்கை**
பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,01:55 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நான்கு நெல் கொள்முதல் நிலையங்களில் 5,360 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், கூடுதலாக ஆறு கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால்கள் பாசன வசதி பெறுகிறது. ஏப்ரல் 15ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் அறுவடை தற்போது நடக்கிறது. நெல் கொள்முதலுக்காக முதல்கட்டமாக பவானி தாலுகா அத்தாணி, பெருந்துறை தாலுகா காஞ்சிகோவில், கோபி தாலுகா நஞ்சப்பகவுண்டன் பாளையம், ஒத்தக்குதிரை ஆகிய நான்கு இடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. இங்கு 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள சன்ன ரக நெல்லுக்கு 11 ரூபாய், மோட்டா ரகத்துக்கு 10.50 ரூபாய் வழங்கப்படுகிறது. அத்தாணியில் 4,608 டன், காஞ்சிகோவில் 2,911 டன், நஞ்சகவுண்டன்பாளையம் 3,088 டன், ஒத்தகுதிரை 2,762 டன் சேர்ந்து மொத்தம் 5,036 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அறுவடைப் பணி தீவிரமாக நடப்பதால், விவசாயிகள் கூடுதலாக கொள்முதல் நிலையங்களை திறக்க வலியுறுத்தினர். இதன்படி, கூகலூர், கள்ளிப்பட்டி, பி.மேட்டுபாளையம், மேவானி, காசிபாளையம், நாகரணை ஆகிய பகுதிகளில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் விஸ்வநாதன் கூறியதாவது: மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நான்கு கொள்முதல் நிலையங்களிலிருந்து 5,360 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக கொள்முதல் நிலையங்கள் அமைக்க கலெக்டர் சுடலைக்கண்ணன் உத்தரவிட்டுள்ளார். கூடுதலாக கூகலூர், கள்ளிபட்டி, பி.மேட்டுபாளையம், மேவானி, காசிபாளையம், நாகரணை ஆகிய பகுதிகளில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஈரோடு மாவட்டத்தில் பருத்தி உற்பத்தி சரிவு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,03:13 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பருத்தி உற்பத்தி பெரும் சரிவு கண்டுள்ளது.ஈரோடு மாவட்டம் பவானி, பெருந்துறை, அம்மாபேட்டை, அந்தியூர், அத்தாணி, சத்தி உள்ளிட்ட பல இடங்களில் பருத்தி பயிரிடப்படுகிறது. பருத்தி பயிரிட்ட விவசாயிகள், அறுவடை செய்த பருத்தியை அந்தியூர் மற்றும் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு விற்பனைக்கு கொண்டு சேர்க்கின்றனர். கோவை, பெருந்துறை, திருப்பூர், கோபி, அன்னூர் உட்பட பல ஊர்களிலிருந்து வியாபாரிகள் பருத்தி ஏலத்தில் கலந்து கொள்கின்றனர்.ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் மாசி மாத இறுதியில், பெருவாரியாக, ஐந்தாம் நம்பர், சுரபி, பி.டி,, காட்டன் ரக பருத்தி மட்டும் அதிகளவில் பயிரிடுகின்றனர். அதிலும், பீரிடு ரகத்திலான விதையின் மூலம், அதிகளவு மகசூல் பெற முடியும் என்பதால், மவுசு அதிகம். பருத்தியிலிருந்து எடுக்கப்படும் இழைகள் மூலமாக காட்டன் துணி வகைகளும், பிரிக்கப்பட்ட விதைகளை மீண்டும் பதப்படுத்தி விற்கவும், எண்ணெயும் தயாரிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களால், பருத்தி பயிரிடுவதை விவசாயிகள் மறந்தே போயினர். காரணம், குலை குலையாக தள்ளிய பருத்தி செடியை கோடை காற்றும், மழையும் துவம்சம் செய்து விடுகிறது. இதனால், செடியிலிருக்கும் காய்களும், பிஞ்சுகளும் உதிர்ந்து, முதலுக்கே மோசம் விளைகிறது.மேலும், செடி வளரவும், காய் பிடிப்பதற்கும் இடையூறாக மாவுப்பூச்சி தொல்லை அதிகரிக்கிறது. இவைகளையெல்லாம் தாண்டி, அறுவடைக்கு வரும் பருத்தியை விற்பனைக்கு கொண்டு சேர்த்தாலும் விலை பிரச்னையை தீர்க்க முடியாததாக இருந்தது.

ஒரு கிலோ பருத்தி விலை 20 ரூபாயிலிருந்து 28 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. இதனால், சென்றாண்டு பருத்தி பயிரிட்ட விவசாயிகளுக்கு இயற்கை ஒரு புறமும், மாவுப்பூச்சி ஒரு புறமும், விலை குறைவு இன்னொரு புறமுமாக மும்முனை தாக்குதல் நடத்தியதால், விவசாயிகள் அனைவரும் நசுக்கப்பட்டனர்.பருத்தி பயிரிட கிடங்கு அமைத்து, விதை ஊன்றி, பயிர் வளர்வதற்கு அடி உரம் சேர்த்து, களையெடுத்து என பல வேலைகளுக்கும் ஆன செலவை, அறுவடை மூலம் ஈடு செய்ய முடியாமல் விவசாயிகள்

நஷ்டத்தில் தள்ளப்பட்டனர். பருத்தி பயிரிடுவதால் லாபம் பார்க்க முடியாது என, கருதிய பெரும்பாலான விவசாயிகள், நிலத்தில் பயிர் செய்யாமலே விட்டு விட்டனர். இதனால், ஈரோடு மாவட்டத்தின் பருத்தி பயிரிடும் சதவீதம் குறைந்து போனது. மேலும், விவசாய கூலி வேலை செய்ய ஆட்கள் கிடைக்காததும், பின்னடைவுக்கு பெரும் காரணமாக அமைந்து விட்டது.பருத்தி பயிரிடுவதை நிறுத்திய விவசாயிகளில் பலர் மஞ்சளுக்கு மாறிவிட்ட நிலையிலும், ஒரு சில விவசாயிகள் பருத்தி பயிரிடுவதை தொடர்ந்தனர். பருத்தி உற்பத்தி குறைந்து போனதால், நடப்பாண்டு பருத்தி விலை நல்ல முன்னேற்றம் இருந்தது. ஒரு கிலோ பருத்தி விலை 41 ரூபாய் வரையில் அதிகபட்சமாக விலை போனது. இதே ரீதியில் அடுத்தாண்டும் நிலையான விலை இருக்கும் பட்சத்தில், உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேங்காய் பருப்பு விலை ரூ.4 உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:52 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் பருப்புக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. தேங்காய் பருப்புக்கு இரண்டாண்டுக்கு முன் 40 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதன் பிறகு 30 ரூபாயாக விலை குறைந்தது. ஜனவரி மாதம் முதல் தேங்காய் பருப்பு விலை ஏறுமுகமாக இருந்தது. மே மாதம் சுட்டெரித்த வெயில் காரணமாக இளநீர் உற்பத்தி மற்றும் துவரம் பருப்பு விலை உயர்வு காரணமாக ஹோட்டல்களில் உணவுப் பண்டங்கள் தயாரிப்பில் தேங்காய்க்கு நல்ல கிராக்கி இருந்தது.

தேங்காயை பறித்து, உடைத்து, காயவைத்து தரமான பருப்பாக மாற்றுவதை விட, இளநீராக, தேங்காயாக விற்பதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர். தற்போது, பருவமழை துவங்கியுள்ளதால் இளநீர் தேவை குறைந்து வருகிறது. துவரம் பருப்பு விலை குறைந்து வருவதாலும், எண்ணெய் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய்க்கு நல்ல விலை கிடைப்பதாலும், விவசாயிகள் தேங்காய் பருப்பு உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர். ஒரு மாதமாக தேங்காய் பருப்பு வரத்தும் அதிகரித்துள்ளது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நேற்று 691 மூட்டை தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தது. கடந்த வாரத்தை விட 106 மூட்டைகள் அதிகமாக வந்தது. அதிகபட்சமாக கிலோ 44.18 ரூபாய், குறைந்தபட்சமாக 41.16 ரூபாய், சராசரியாக 43.78 ரூபாய்க்கு விற்றது. நடப்பு

வாரம் 4.10 ரூபாய் விலை அதிகரித்திருந்தது. மொத்தம் 14 லட்சம் ரூபாய்க்கு தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**மூலிகை மருத்துவச் செடிகளை ஆவணப்படுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:43 IST

கோவை: ""உலகளவில் 80 சதவீத மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ள மூலிகை மருத்துவத்தின் சந்தை மதிப்பு, 3.22 லட்சம் கோடியாக உள்ளது. 2050ல் இது 32.20 லட்சம் கோடியாக உயரும் என எதிர் பார்க்கப்படுவதால் மூலிகை மருத்துவச் செடிகளை அடையாளம் கண்டு உடனடியாக ஆவணப்படுத்துவது முக்கியம்," என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு இயக்குனர் இளவழகன் பேசினார். பாரதியார் பல்கலையில் மூலிகை மருத்துவம் குறித்த தேசிய கருத்தரங்கம் நடந்தது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மூலிகை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், மூலிகை மருத்துவ நிறுவனங்கள் உட்பட 700க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர். துவக்க விழாவில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின்(டி.ஆர்.டி.ஓ) இயக்குனர் இளவழகன் பேசியதாவது: ஆங்கில மருந்துகளின் பக்க விளைவுகாரணமாக, பக்கவிளைவுகள் இல்லாத மூலிகை மருந்துகளை மேற்கத்திய நாடுகளில் பெருமளவு பயன்படுத்து கின்றனர். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் தற்போது மூலிகை மருத்துவம் குறித்த ஆராய்ச்சி அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. மோசமான சூழலில் பணிபுரியும் ராணுவ வீரர்களின் உடல் நலனை மேம்படுத்துவதிலும், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் கவனம் செலுத்துகிறது. நோய் வராமல் தடுக்கும் திறன் மூலிகை மருந்துகளுக்கு உள்ளதால், இன்று உலகளவில் 80 சதவீத மக்கள் மூலிகை மருத்துவத்தை நம்புகின்றனர். இம்மருத்துவத்தின் உலகளாவிய சந்தை மதிப்பு, 3 லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது. 2050ல் 32 லட்சம் கோடி ரூபாயாக ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் உயிர்ச்சூழல் மண்டலம் அதிகமாக உள்ளதால், மூலிகை மருத்துவ மேம்பாட்டில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உள்ளது. நம் நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் இமயமலைச் சாரல்களில் ஏராளமான மூலிகைச் செடிகள் உள்ளன. இன்று உலகில் 7,000 மருத்துவ குணம் கொண்ட செடிகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் மூலிகை மருத்துவத்துக்கு சுமார் 700 செடிகள் பயன்படுத்தப்படுகின்றன. இது போன்ற செடிகளை அடையாளம் கண்டு ஆவணப்படுத்துவது முக்கியம். உலக சுகாதார நிறுவனம் மூலிகை மருந்துகளை

அங்கீகரித்துள்ளதால், அதன் அறுவடை தொழில் நுட்பம், பதப்படுத்துதல், பாதுகாத்தலை முறைப்படுத்த வேண்டும். பல கொடிய நோய்களை தீர்க்கும் வல்லமை, மூலிகை மருத்துவத்துக்கு உள்ளது. இது போன்ற மூலிகைகளை அடையாளம் கண்டு வெளியே கொண்டு வருவது ஆராய்ச்சியாளர்களின் கையில்தான் உள்ளது. இன்று தகவல் தொழில் நுட் பத்துக்கு அடுத்தபடியாக மூலிகை மருத்துவம் அதிக வருவாய் தருகிறது. இந்த வாய்ப்பை இந்தியா சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு, இளவழகன் பேசினார். போலீஸ் உதவி கமிஷனர் பாலாஜி சரவணன் பேசுகையில், ""மருத்துவ மூலிகைகளை நாம் பழைய காலம் முதலே பயன்படுத்தி வருகிறோம். புதிதாக கண்டுபிடித்து விடவில்லை. நவீன மருத்துவ அறிமுகத்தால் மூலிகை மருத்துவத்தின் மகத்துவத்தை மறந்து விட்டோம். நமது பாசுமதி அரிசிக்கு அமெரிக்கர்கள் காப்புரிமை பெற்று விட்டனர். இதுபோல் நமக்கு சொந்தமான இயற்கை வளங்களை நாமே பயன்படுத்த முடியாத நிலை வருவதற்குள், புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுக்கு முதலில் காப்புரிமை பெற்று விட வேண்டும்," என்றார். துணைவேந்தர் சுவாமிநாதன், மைசூருவில் உள்ள உணவு பாதுகாப்பு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி ராதாகிருஷ்ணா, தாவரவியல் துறைத் தலைவர் மணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை பேராசிரியர் பரிமேலழகன் மற்றும் தாவரவியல் துறை பேராசிரியர்கள் செய் திருந்தனர். கோவையில் அபூர்வ துளசிச் செடி டி.ஆர்.டி.ஓ., இயக்குனர் இளவழகன் கூறுகையில், ""டி.ஆர்.டி.ஓ.,வில் மலேரியா நோயை எதிர்க்கும் முக்கிய மூலக்கூறு கண்டறியப் பட்டுள்ளது. இம்மருந்து பரிசோதனை கட்டத்தில் உள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் வெளியிடப்படும். கதிர் வீச்சில் இருந்து பாதுகாப்பு தரும் அரிய வகை துளசிச் செடி, கோவையில் மட்டுமே உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. ""இது தொடர்பான ஆராய்ச்சி முடிவுகள் வெளியானால், கதிர்வீச்சு அபாயத்தில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் உலகின் முதல் மூலிகை மருந்து என்ற பெருமை கிடைக்கும். ""லடாக் பள்ளத்தாக்கில் கண்டறியப்பட்டுள்ள ஒரு மூலிகை, காயங்களை உடனடியாக குணமாக்கும் தன்மை கொண்டதாக உள்ளது. ""இது போன்ற பல்வேறு ஆராய்ச்சிகளை டி.ஆர்.டி.ஓ., மேற்கொண்டு வருகிறது," என்றார்.

**சோலையாறு நீர்மட்டம் 142 அடியாக உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:48 IST

வால்பாறை: வால்பாறையில் மீண்டும் மழை சூடுபிடித்துள்ள நிலையில், சோலையாறு அணையின் நீர்மட்டம் 142.29 அடியாக உயர்ந்தது. வால்பாறையில் கடந்த சில நாட்களாக மழைப்பொழிவு குறைந்தது. இதனால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து குறைந்தது. கடந்த இரண்டு நாட்களாக வால்பாறை டவுன் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் கன மழை பெய்துவருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடுமையான குளிரிலும் தொழிலாளர்கள் தலையில் பிளாஸ்டிக் மைக்கா அணிந்து தேயிலை பறித்து வருகின்றனர். சோலையாறு அணை நீர்மட்டம் நேற்று காலை142.29 அடியாக உயர்ந்தது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 96 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு விநாடிக்கு 400 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்)வால்பாறை - 33, மேல்நீராறு - 43, கீழ்நீராறு - 26, சோலையாறு - 33, பரம்பிக்குளம் - 27.

**சொட்டு நீர் மானியம் வழங்குவதில் மாற்றம்: விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,03:17 IST

திருப்பூர்: "சொட்டு நீர் பாசனத்துக்கு அளிக்கும் மானிய முறையில், அரசு மாற்றம் கொண்டு வர வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, சொட்டு நீர் பாசனம் வெகுவாக உதவுகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க, 65 சதவீதம் வரை அரசு மானியம் அளிக் கிறது. வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை சார்பிலும் மானியம் வழங்கப்படுகிறது.

ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது. அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்கள் மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும் என்பது விதியாக உள்ளது. இந்நடைமுறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்பதை விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்கள் மூலம் மட்டுமே சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும். சுயமாக பொருட்களை வாங்கினால், அதற்கு மானியம் இல்லை. பரிந்துரைத்த நிறுவனங்களின் பொருட்கள் விலை கூடுதலாக உள்ளன. லோக் கல் கம்பெனிகளின்

பொருட்களை பயன்படுத்தினால், செலவு குறைய வாய்ப்புள்ளது. பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் வெளியூரை சேர்ந்தவையாக இருக்கின்றன. பழுது ஏற்பட்டால், வால்வு, பில்டர், வாசர் உள்ளிட்டவை வெளியில் எங்கும் கிடைப்பதில்லை. நிறுவனம் அனுப்பி வைக்கும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. அவை வரும் வரை காத்திருந்தால், பயிர்களின் வளர்ச்சி பாதிக்கும் சூழல் ஏற்படுகிறது. புதிய தொழில்நுட்பம் வருவதால், பழைய முறைகளுக்கு உதிரி பொருட்கள் உடனடியாக கிடைப்பதில்லை. கம்பெனியில் இருந்து வர வேண்டும் என தாமதம் செய்கின்றனர். லோக்கல் பகுதிகளில் அனைத்து உதிரி பொருட்களும் வழங்குவதற்கு, நிறுவனங்களை தயார்படுத்த வேண்டும். சொட்டு நீருக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்து அமைப்பதில், விவசாயிகளின் விருப்பத்துக்கே விட வேண்டும். சொட்டு நீர் பாசன மானியம் அளிப்பதில் மாற்றம் கொண்டு வர வேண்டும். பல்வேறு இலவச திட்டங்களை அளிக்கும் அரசு, ஏற்கனவே உள்ள திட்டம் முழுமையாக விவசாயிகளுக்கு கிடைக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர். அதிகாரிகள் கூறுகையில், "கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட மேற்கு மண்டலத்துக்கு, 21 நிறுவனங்களை அரசு பரிந்துரைத்துள்ளது. சொட்டு நீர் அமைப்பதற்கான பொருட்களின் மதிப்புக்கு மட்டும், 65 சதவீதம் மானியம் கிடைக்கும். வரி விதிப்பு, போக்குவரத்து செலவு, விளைநிலத்தில் குழி எடுத்தல் செலவுக்கு மானியம் கிடைக்காது. பயிர்களின் இடைவெளிக்கு ஏற்றவாறு, ஒரு யூனிட் பகுதிக்கு அரசு நிர்ணயித்துள்ள அளவே மானியம் வழங்கப்படும். தற்போது விவசாயிகள் விடுத்துள்ள கோரிக்கையை, தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும்,' என்றனர்.

**பயிர்க்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமா?**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,01:31 IST

உடுமலை:தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில் கட்டுப்பாடுகளை தளர்த்தி கடன் வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., இரண்டாம் மண்டலம் மற்றும் அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இரண்டு பாசன திட்டங்களிலும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கரில் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.சாகுபடி பணிகளுக்கான செலவினங்களுக்கு தொடக்க வேளாண்

கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படும் பயிர்க்கடனை மட்டுமே விவசாயிகள் நம்பியுள்ளனர்.

இந்நிலையில், பயிர்கடன் பெற கூட்டுறவு சங்கங்களில் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். விண்ணப்பத்துடன் விளைநிலத்தின் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்த முடிவுகளை இணைக்க வேண்டும். கிராமப்பகுதியில் இவ்வகை பரிசோதனைகளை செய்ய எவ்வித வசதியும் இல்லை. இதனால், விவசாயிகள் பரிசோதனைக்காக அலைய வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. பரிசோதனைகளை மேற்கொள்ள தேவையான வசதிகளை அரசு ஏற்படுத்திய பின்னர் இத்திட்டத்தை கட்டாயப்படுத்தலாம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குழப்பம் ஏற்படுத்தும் காப்பீட்டு திட்டம்: இந்தாண்டு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து பயிர்களையும் காப்பீடு செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர்கடன் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீடு திட்டம் ட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.இத்திட்டத்தால் கிடைக்கும் பலன்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. கோவை மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள ஏழு வட்டாரங்களுக்கு வானிலை சார்ந்த பயிர்க்காப்பீட்டு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. திட்டத்தில், சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு பிடித்தம் செய்யப்படும் பிரிமீயம் தொகை ஒராண்டு வட்டிக்கு இணையாக உள்ளது. இவ்வாறு, அதிக தொகை பயிர்க்கடனில் பிடித்தம் செய்யப்படும் நிலையில் இந்த திட்டத்தால் முழுமையான பலன் கிடைக்குமா என்பது விவசாயிகளிடம் கேள்விக்குறியை உருவாக்கியுள்ளது.உதாரணமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் மக்காச்சோள சாகுபடிக்கு 7 ஆயிரம் ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இதில், ஏக்கருக்கு 276 ரூபாய் காப்பீடு பிரிமீயமாக பிடித்தம் செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடி ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் கடனாகவும், 826 ரூபாய் பிரிமீயமாகவும் பிடித்தம் செய்யப்படுகிறது. பருத்திக்காக பயிர்கடன் பெறும் விவசாயி ஒராண்டில் கடன் தொகையை செலுத்த முடியாவிட்டால் அவருக்கு 840 ரூபாய் வட்டியாக கணக்கிடப்படும். இதற்கு இணையாக காப்பீடு பிரிமியம் தொகை 826 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. கட்டாயப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளார்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பல்வேறு திட்டங்களின் கீழ் காப்பீடு செய்யும் நிலையில் பயிர்கள் பாதிக்கப்படும் போது நிவாரணம் கிடைப்பதில்லை. வருவாய் உள்வட்டம் முழுவதும் பயிர்கள் பாதிக்கப்பட்டால் மட்டுமே குறைந்தளவு நிவாரணம் கிடைக்கிறது.

தற்போதைய காப்பீட்டு திட்டத்தில் நிவாரணம் கிடைப்பதற்காக நடைமுறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கணிசமான தொகை பிடித்தம் செய்யப்படுவதால், செலவினங்களுக்கு பிரச்னை ஏற்படுகிறது. அரசு இது குறித்து பரிசீலனை செய்து பயிர்கடன் பெற விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும்', என்றனர்.புலம்பும் அலுவலர்கள்தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் அலுவலர்கள் காப்பீட்டு திட்டத்திற்காக கடன் தொகையில் பிடித்தம் செய்யப்படுவதை விளக்கினாலும் விவசாயிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால், அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும் வாக்குவாதம் ஏற்படுவது தொடர்கதையாகியுள்ளது. அனைத்து விவசாயிகளையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர உயரதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இரண்டு தரப்பிலும் சிக்கும் அலுவலர்கள் தங்கள் பிரச்னை குறித்து புலம்பி வருகின்றனர்.

**குறிச்சிக்கோட்டையில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,03:34 IST

உடுமலை: பருவநிலை மாற்றங்களினால்,நோய் பரவாமல் தடுக்க கால்நடைகளுக்கு கட்டாயம் குடற்புழு நீக்க சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. உடுமலை அருகே குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தகத்தில் நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. கால்நடை துறை டாக்டர் சதீஷ் தலைமை வகித்து பேசியதாவது: மழைக்காலங்களில் முளைவிடும் புதிய புல் நுனிகளில் பல்வேறு புழுக்களின் முட்டைகள் இருக்கும். இந்த புற்களை கால்நடைகள் உண்பதால் அவற்றின் குடலில் முட்டைகள் சென்று ஜீரண சக்தி குறைந்து பல்வேறு பிரச்னைகள் ஏற்படும். இப்பிரச்னைக்கு தீர்வாக கால்நடைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை கட்டாயம் குடற்புழு நீக்க சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கால்நடை துறை சார்பில் கிளை நிலையங்களிலும், மருத்துவ முகாம்களிலும் இலவசமாக இந்த சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு, சிறப்பு கால்நடை முகாம்களை விவசாயிகள் பயன்படுத்த கொள்ளலாம். இந்த முகாம்களை

விவசாயிகள் பயன்படுத்தி கொள்வதால் கால்நடைகளை நோய் தாக்குதலிலிருந்து பாதுகாக்கலாம்', இவ்வாறு பேசினார். கால்நடை ஆய்வாளர் அப்துல் கலாம் நோய் தடுப்பு முறைகள் குறித்து பேசினார். பார்த்தசாரதிபுரம் மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**24 கிலோ எடை சேனைக் கிழங்கு;இயற்கை விவசாயத்தில் நிரூபணம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2010,01:30 IST

பந்தலூர்: இயற்கை உரம் மூலம் விவசாயம் செய்தால் நல்ல பயன் கிடைக்கும் என நிரூபித்திருக்கிறார் பந்தலூர் எருமாடு பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர். கடந்த பல்லாண்டுகளுக்கு முன்னால், வனப்பகுதிகளாக காணப்பட்ட நிலங்கள் பல, தற்போது விவசாய நிலங்களாக மாற்றம் பெற்றுள்ளன. விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை உரங்களும், மெல்ல, மெல்ல கைவிடப்பட்டு, ரசாயன உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் பலர் விரும்புகின்றனர். ரசாயன உரத்தை உபயோகிப்பதால், மண்ணின் இயற்கைத் தன்மை அழிந்து, தொடர்ந்து விவசாயம் மேற்கொள்ளும் போது, மகசூலும் பாதிக்கப்படுகிறது. விவசாயத்தில் இயற்கை உரத்தின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என, தோட்டக்கலைத் துறையினர் வலியுறுத்துகின்றனர். பந்தலூர் கையுன்னி, எருமாடு பகுதிகளில் உள்ள விவசாயிகள், இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனரர். எருமாடு அடுத்துள்ள சிறச்சால் பகுதியை சேர்ந்தவர் மாதவன்.

தேயிலை, காபி, குருமிளகு, வாழை, காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வரும் இவர், இயற்கை உரங்களை பயன்படுத்தி வருகிறார். தோட்டத்தில் உள்ள குப்பைக் குழிக்கு அருகில் சேனைக் கிழங்கு நடவு செய்துள்ளார்.

வீட்டு முற்றத்தில் சேகரிக்கும் குப்பை, தழைகளை உரமாக இட்டு பராமரித்ததால், செடியில் இருந்து, 24 கிலோ எடை கொண்ட ஒரு சேனைக் கிழங்கு விளைந்துள்ளது. மாதவன் கூறுகையில், ""சேனைக் கிழங்கு சாதாரணமாக 5 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். இயற்கை விவசாயத்தின் மூலம் விளைவிக்கப்பட்ட இந்த கிழங்கு, 24 கிலோ எடை கொண்டுள்ளது. அனைத்து விவசாயத்திலும் இயற்கை உரத்தை பயன்படுத்தினால், நல்ல பயனை பெறலாம்," என்றார்.

**மானிய விலையில் சம்பா நெல் விதை விவசாயிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:53 IST

முசிறி: முசிறி வேளாண் கோட்ட வேளாண் உதவி இயக்குனர் ராஜாமணி வெளியிட்ட அறிக்கை: முசிறி வட்டாரத்தை சேர்ந்த சம்பா நெல் சாகுபடி விவசாயிகள் தற்சமயம் சம்பா நெல் சாகுபடி பருவம் தொடங்கி விட்டதால் விவசாயிகளுக்கு தேவையான சம்பா நெல் விதைகளான மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, பி.பி.டி 5204, ஏடிடி 39 ஆகிய நெல் ரகங்கள் முசிறி மற்றும் புலிவலம் வேளாண் விரிவாக்க மையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு மான்ய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தாண்டு ஒருங்கிணைந்த தான்ய அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செம்மை நெல் சாகுபடி 570 ஏக்கரில் செயல்படுத்தப்பட உள்ளது. எனவே, முசிறி பகுதி மற்றும் புலிவலம் பகுதி விவசாயிகள் தங்களது கிராமத்திற்கு வருகை தரும் உதவி வேளாண் அலுவலர்களிடம் மான்ய விண்ணப்பம் பெற்று, விதைகள் பெற்று பயன் பெருமாறும் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் பெயர் பதிவு செய்து இடுபொருளை பெறலாம்.

**வேளாண் அதிகாரி முசிறியில் ஆய்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:49 IST

முசிறி: திருச்சி மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (மாநில திட்டம்) நடேசன் முசிறி பகுதியில் நடந்து வரும் திட்ட பணிகளை பார்வையிட்டார்.

முசிறியில் ஆறு லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்தினையும், 25 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் விதை சேமிப்பு கிடங்கினை நடேசன் பார்வையிட்டார். அந்தரப்பட்டி கிராமத்தில் விவசாயி சுகுமாரின் வயலில் அமைக்கப்பட்டிருந்த கம்பு விதைப்பண்ணையை பார்வையிட்டார். அங்கிருந்த விவசாயிகளிடம் தரமான சான்று பெற்ற விதைகளை உபயோகித்து சாகுபடி செய்தால் பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து தப்பலாம். கூடுதலான மகசூலும் கிடைக்கும்.

ஆகவே, சான்று பெற்ற விதைகளை உபயோகியுங்கள். அதிகாரிகளும், விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்க வேண்டும் எனக்கூறினார்.

முசிறி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் ஆய்வு செய்து விதை இருப்பு, விதை விநியோகம் குறித்து ஆய்வு செய்தார். துணை இயக்குனருடன் முசிறி வேளாண் உதவி இயக்குனர் (பொ) ராஜாமணி உதவி விதை அலுவலர் ஜெயப்பிரகாஷ், வேளாண் உதவி அலுவலர் ராஜா மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**அரசின் இலவச மின்மோட்டார் திட்டம் : விவசாய சங்க பிரதிநிதிகள் முதல்வருக்கு நன்றி அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:53 IST

திருச்சி: தமிழக முதல்வர் கருணாநிதியை நேற்று நேரில் சந்தித்த திருச்சி விவசாய சங்க பிரதிநிதிகள், "இலவச மின்மோட்டார் வழங்குவதாக அறிவித்ததற்கு' நன்றி தெரிவித்தனர்.

புதிய கலெக்டர் அலுவலகம் கட்டடம் திறப்புவிழா, பல்வேறு அரசு நிகழ்ச்சி, அன்பில்தர்மலிங்கம் சிலை திறப்புவிழா, தி.மு.க., பொதுக்கூட்டம் என பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழக முதல்வர் கருணாநிதி நேற்று ரயில் மூலம் திருச்சி வந்தார். சங்கம் ஹோட்டலில் தங்கியிருந்த முதல்வர் கருணாநிதியை திருச்சி விவசாய சங்க பிரதிநிதிகள் நேற்று நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

திருச்சி மாவட்ட காங்கிரஸ் பொறுப்புக்குழு உறுப்பினர் புலியூர்நாகராஜன், பாரதியகிஷான் சங்க மாநில பொதுச்செயலாளர் அய்யாக்கண்ணு, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க புரவலர் தீட்ஷிதர் பாலசுப்பிரமணியன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கருணாநிதியை சந்தித்தனர்.

பின்னர் அவர்கள் கூறியதாவது: விவசாய கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றினார். நெல் உற்பத்தி செய்யும் விவசயிகளுக்கு குவிண்டால் நெல் 1,100 ரூபாயாக உயர்த்தினார். 15 லட்சம் இலவச மின்மோட்டார்

வழங்குவதாக அறிவித்துள்ளார். இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் விவசாயிகளுக்கு வட்டியில்லா விவசாய கடன் வழங்கியுள்ளார்.
விவசாயிகளுக்கு உரம் மான்யம், விவசாயத்துக்கான நவீன கருவி வாங்க 100 சதவீதம் மற்றும் 50 சதவீதம் மான்யம் வழங்கி விவசாயிகளை உற்சாகப்படுத்தினார். அதற்காக முதல்வருக்கு நன்றி, பாராட்டை தெரிவித்தோம். விவசாயத்துக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.
"நீர்மட்டம் உயரவும், காவிரி கரையோரம் பகுதி காய்வதை தடுக்கவும் முத்தரசநல்லூர் மற்றும் கூட்டுக்குடிநீர் திட்ட பகுதி காவிரி ஆற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும். இலவச விவசாய மின் திட்டம் வழங்க வேண்டும். தோட்டக்கலை பயிர்களுக்கு இலவச மின்சாரம் ரத்து என மின்வாரிய அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும். சேலம், நாமக்கல், திருச்சி வடக்குப்பகுதி மக்களை காப்பாற்ற காவிரி வெள்ள நீரை திருப்பிவிட வேண்டும். ஐயாற்றிலிருந்து திருத்தியமலை ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும்' என்பன உள்பட பல்வேறு கோரிக்கை வலியுறுத்தப்பட்டன.

**வே.பாளையம் விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:41 IST

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம், நொய்யல், புகளூர் சுற்றுப்புற பகுதியில் மஞ்சள் கிழங்கு, சிறிய வெங்காயம் நடவு செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது. ஊடுபயிர் வெங்காயத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளதால், விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி துவக்கியுள்ளனர்.
மஞ்சள் கிழங்கு மற்றும் விரளி மஞ்சள் விலை உயர்ந்து கொண்டேயிருப்பதால், காவிரி பாசனம் பகுதியில் மஞ்சள் விளைச்சலின் முக்கிய இடமாக உள்ள ஈரோடு மாவட்டத்தை தொடர்ந்து, கடந்த ஆண்டு முதல் கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம் சுற்றியுள்ள நொய்யல் முதல் புகளூர் பகுதி வரை மஞ்சள் சாகுபடி துவங்கப்பட்டுள்ளது.
மஞ்சள் விவசாயி கணேசன் கூறியதாவது: மஞ்சள் தற்போது நல்லவிலைக்கு விற்கப்படுவதாலும், இப்பகுதி மஞ்சள் தரம் குறையாமல் செழிப்பாக வளர்வதாலும்,

மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும், இதன் இடைவெளியில், ஊடுபயிராக சிறிய ரக நாட்டு வெங்காயம் நடவு செய்யப்படுகிறது. தற்போது, இந்த வெங்காயத்துக்கும் மார்க்கெட்டில் நல்ல விலை உள்ளதால், கூடுதல் பயனடையமுடிகிறது. இருபயிருடைய அறுவடைக்காலம் ஒரே குறிப்பிட்ட கால அளவில் உள்ளதால், முதலில் வெங்காயம் அறுவை செய்யப்படுகிறது. வெங்காயம் விற்பனை மூலம் கிடைக்கும் தொகைமூலம் மஞ்சள் கிழங்கு அறுவடை செய்து விற்பனைக்கு பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. மஞ்சளின் வரும் நிகரலாபம் கணிசமாக கிடைப்பதால், விவசாயிகள் இடையே இதற்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**அதிக மகசூல் பெற செம்மை நெல் சாகுபடி : வேளாண் உதவி இயக்குனர் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 09,2010,02:40 IST

குளித்தலை: "குறைந்த செலவில் அதிக மகசூல் பெற செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்ற வேண்டும்' என, விவசாயிகளுக்கு வேளாண் உதவி இயக்குனர்(பொ) காதர்மொய்தீன் அறிவித்துள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: தோகமலை வட்டாரத்தில் நெல் சாகுபடியில் இடுபொருள் செலவு அதிகரிப்பதால், சாகுபடி பரப்பளவு குறைகிறது. இதனால் புதிய தொழில் நுட்பத்தில் குறைந்த இடுபொருளை கொண்டு, அதிக லாபம் பெற செம்மை நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில் ஒரு ஏக்கர் நடவு செய்ய 3 கிலோ விதை போதுமானது. விதையை 24 மணி நேரம் நீரில் ஊற வைத்து, 24 மணி நேரம் இருட்டறையில் வைத்து முளை கட்ட வேண்டும். விதைக்கும் முன் முளை கட்டிய விதையை ஒரு பாக்கெட் 200 கிராம் அசோஸ்பைரில்லம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரம் மற்றும் 30 கிராம் சூடோமோனஸ் புளுரோசன்ஸ் உயிர் பூசணை கொல்லி மூலம் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

இதனால், முளைப்பு திறன் அதிகரித்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும். ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் நாற்றுமேடை அமைக்க வேண்டும். நாற்று மேடை வயல் மண் குப்பை மற்றும் 750 கிராம் டிஏபி ஆகியவற்றை கலந்து மே டை மேல் படுக்கை

அமைக்க வேண்டும். இந்த நாற்று மேடையில் முளைகட்டிய விதையை பரவலாக விதைத்து வழக்கமான முறையில் பராமரிக்க வேண்டும். 14 நாள் வயதுடைய நன்கு வளர்ந்த நெல் உறையுடன் கூடிய நாற்றுக்களாக இருக்க வேண்டும். நாற்று பறிக்கும் போது தனியாக அடுக்காமல் கட்டாக எடுத்து வயலில் நடவுக்கு வசதியாக ஆங்காங்கே வைக்க வேண்டும்.

நடவுக்கு 10 நாட்களுக்கு முன், ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட்டு சோறு உழவு செய்ய வேண்டும். இளம் நாற்றுக்களை வேர் அறுபடாமல் ஒவ்வொரு நாற்றாக பிரித்து வைக்க வேண்டும். நாற்றுக்களை 15 முதல் 30 நிமிடத்துக்குள் காய்ந்து விடாமல் நடவு செய்ய வேண்டும்.

நாற்றுகளை 25க்கு 25 என சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். நட்டப்பின் பரிந்துரைக்கப்பட்ட தழை, மணி மற்றும் சாம்பல் சத்து இட வேண்டும். நாற்று நட்டு 15 நாளில் கோணாவீடர் கருவி மூலம் பயிரின் ஊடேகுறுக்கும், நெடுக்குமாக உழவு செய்ய வேண்டும். 10 நாளுக்கு ஒரு முறை பயிரின் நிறத்துக்கு ஒப்பிட்டு தழைச்சத்து இட வேண்டும். வண்ண அட்டையை இலையின் நிறந்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது தேவையான குறியீட்டுக்கு கீழ் இருந்தால் குறுவை பருவத்துக்கு ஏக்கருக்கு 31 கிலோ யூரியாவும், சம்பா பருவத்துக்கு 26 கிலோ யூரியாவும் இட வேண்டும். இந்த முறையை கடைப்பிடிப்பதால் நெல்லில் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கரூர் உழவர்சந்தையில் 730 டன் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:51 IST

கரூர்: "கரூர் உழவர்சந்தையில் ஆகஸ்டில் 730 டன் காய்கறி விற்பனை செய்யப்பட்டுள்ளது' என, உழவர்சந்தை நிர்வாக அலுவலர் கணேசன், உதவி அலுவலர் மகாவிஷ்ணன் அறிவித்துள்ளனர்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், அரவக்குறிச்சி ஆகிய பகுதிகளில் உழவர்சந்தை செயல்படுகிறது.

கரூர் உழவர்சந்தையில் தினசரி 20 டன் காய்கறி சராசரியாக விற்பனை செய்யப்படுகிறது. 90 விவசாயிகள் கடை அமைத்து தங்கள் விளைபொருட்களை கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர். பண்டிகை நாட்களில் 25 டன் வரை காய்கறி விற்பனை செய்யப்படுகிறது. ஆகஸ்டில் கரூர் உழவர்சந்தையில் 730 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. இதன் மதிப்பு 95 லட்சம் ரூபாய். 5,700 விவசாயிகள் பொருட்களை விற்பனை செய்துள்ளனர். நுகர்வோர் 1.46 லட்சம் பேர் சந்தைக்கு வந்துள்ளனர். உழவர்சந்தையில் தற்போது நெல்லிக்காய், மாங்காய் வரத்து அதிகரித்துள்ளதால், நெல்லிக்காய் கிலோ 25க்கும், மாங்காய் கிலோ 40க்கும், கொய்யா 18க்கும், சோளக்கதிர் 10 ரூபாய்க்கும், காலிபிளவர் 12க்கும், எலுமிச்சை 2 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## இலவச மோட்டார் வழங்கும் திட்ட கலந்தாய்வு கூட்டம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,00:48 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில் இலவச மின்மோட்டார் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இலவச மின்மோட்டார் திட்டம் தொடர்பாக நாளை செப்., 9ம் தேதி மாலை 3.30 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமையில் விவசாய பெருமக்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடக்கிறது. இக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் அனைவரும் பங்கேற்று ஆலோசனை தெரிவிக்கலாம்

## விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2010,02:08 IST

மதுரை : பருப்பு விலையை குறைக்க, தமிழகத்தில் 3200 ஏக்கரில் அனைத்து வித பயறுகளையும் பயிரிட, விவசாயிகளுடன் மத்திய அரசு, உலக வங்கி மற்றும் டாடா நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளன. இதன்மூலம் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

இந்தியாவில் பருப்பு விளைச்சல் குறைவாக இருப்பதால், கனடா, ஆஸ்திரேலியா, மியான்மர் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதற்கான வரி, போக்குவரத்து செலவு போன்ற காரணங்களால் பருப்பு விலை அதிகரிக்கிறது. இதை தவிர்க்க, உலக வங்கி, மத்திய அரசு மற்றும் டாடா நிறுவனம் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. இதன்படி, பஞ்சாப் மற்றும் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3200 ஏக்கர் பாசன நிலங்களை தேர்வு செய்துள்ளனர். அனைத்து வித பயிர்களையும் பயிரிட, விவசாயிகளுக்கு தேவையான உதவிகள் செய்ய உள்ளனர். இதுதொடர்பாக விவசாயிகளிடம் டாடா நிறுவனம் சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு நிச்சயம் 5 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

**தாண்டிக்குடியில் பீன்ஸ் விளைச்சல் பாதிப்பு**

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பல ஏக்கரில் முருங்கை பீன்ஸ் பயிரிடப்பட்டது. காக்கி, வெள்ளை, மஞ்சள் முருங்கை பீன்ஸ் வகைகள் இதில் அடங் கும். கொடியாக வளரும் தன்மை கொண்ட இதற்கு பந்தல் அமைப்பு தேவை. மூன்று மாதத்தில் காய்கள் பறிக்க தயாராகிவிடும். தற்போது மலைப்பகுதியில் நீடிக்கும் தொடர் மழையால் பூஞ்சாண நோய் பயிரில் தாக்கியுள்ளதால் விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளது. இருந்தபோதிலும் பறிக் கப்பட்ட பீன்ஸ் மதுரை, திண்டுக்கல், திருச்சி, ஒட் டன்சத்திரம் மார்கெட்களுக்கு அனுப் பப்படுகிறது. தற்போது 10 கிலோ., ரூ.300 முதல் 350 வரை விற்கப்படுகிறது. விளைச் சல் பாதித்த நிலையில் விலை உயர்வு விவசாயிகளுக்கு ஆறுதலை அளித் துள்ளது.

**ரூ. 2 கோடியில் திராட்சைக்கு ஏல மையம் அமைக்க முடிவு**

கம்பம்: இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் காமயகவுண் டன்பட்டியில் திராட்சைக்கு ஏல மையம் அமைக்க தமிழ்நாடு விளை பொருள் விற்பனை வாரியம் முடிவு செய்துள்ளது. தேனி மாவட்டத்தில் ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், காமயகவுண்டன்பட்டி,

சுருளிப்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. சமீபத்தில் திராட்சை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் காமயகவுண்டன்பட்டியில் திராட்சைக்கென ஏல மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள் ளது. இந்த மையம் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது. இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்படும் இந்த மையத்தில் பெரிய அளவில் குளிர்சாதன கிட்டங்கி, பழத்தை ஏலம் விட தனி ஹால், பாங்கிங் வசதி, ஏலம் கேட்க வியாபாரிகள் அமரும் வசதி, மார்க்கெட்டிங் வசதி, வட மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் விலை நிலவரம் தெரிவிக்கும் வசதி, தோட்டக்கலைத்துறையின் தொழில்நுட்ப பிரிவு, விவசாயிகள் ஓய்வு எடுக்க அறை, இருப்பு வைத்துள்ள பழத்திற்கு கடன் பெறும் வசதி, கேன்டீன் உள்ளிட்ட பல வசதிகள் இருக்கும். ஏல மையம் அமைக்கும் பணி தமிழ்நாடு விளைபொருள் விற்பனை வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

### தடுப்புச்சுவர் இல்லாத கிணறு:விவசாயிகளுக்கு எச்சரிக்கை

தேனி:விவசாயிகள் தங்களின் கிணறுகளுக்கு தடுப்புச்சுவர் அமைத்து பாதுகாப் பாக வைத்துக் கொள்ள வேண்டும். விபத்து ஏற்பட்டால் சம்மந்தப் பட்ட விவசாயிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பாலகிருஷ்ணன் எஸ்.பி., எச்சரித்துள்ளார். அவர் கூறியதாவது; கண்டமனூர் அருகே கணேசபுரத்தில் பூமிநாதன் என்பவரின் தோட்டத்தில் மின்மோட்டாரை இறக்கி வைக்க முயன்ற காட்டுராஜா, செல்வம் ஆகியோர் டிராக்டருடன் கிணற் றுக் குள் விழுந்து இறந்தனர்.இந்த கிணற்றில் தடுப்புச் சுவர் இல்லாததே விபத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களின் கிணற்றுக்கு உடனடியாக தடுப்புச்சுவர் கட்ட வேண்டும்.தடுப்புச்சுவர் கட்டாமல் இருக்கும் கிணற்றில் ஏதாவது விபத்து ஏற்பட் டாலோ, உயிர்சேதம் ஏற் பட்டாலோ சம்மந்தப் பட்ட கிணறு உரிமையாளர்கள் முழு பொறுப்பு ஏற்க வேண்டும். கிணறு உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### புதிய அணைக்கு ஆய்வு செய்ய எதிர்ப்பு:தமிழக விவசாயிகள் வழக்கு தொடர முடிவு

கூடலூர்:பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்காக கேரள பொறியாளர் குழு ஆய்வு செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக விவசாயிகள் வழக்கு தொடர முடிவு

செய்துள்ளனர். பெரியாறு அணைப்பிரச்னை குறித்த வழக்குகள் சுப்ரீம் கோர்டில் நடந்து வரும் நிலையில், இதை கண்டு கொள்ளாமல் அணைக்கு அருகில் புதிய அணை கட்டுவதற்கான சர்வே பணியில் கேரள அரசு முழுவீச்சில் ஈடுபட்டு வருகிறது. இரண்டு கட்ட சர்வே பணியை முடித்து மூன்றாவது கட்ட சர்வே பணியை செய்து வருகிறது. புதிய அணைக்கான திட்ட மதிப்பீடு தயார் நிலையில் வைத்துள்ளது.

இரு மாநில பிரச்னையில், தன்னிச்சையான முடிவு எடுத்து அதை நடைமுறைப்படுத்தி வருவதற்கு தமிழக விவசாயிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். ஐந்து மாவட்ட விவசாய சங்க செயலாளர் கே.எம்.அப்பாஸ் கூறியதாவது; பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டக்கூடாது என்பதை முன்வைத்து தற்போது நடந்து வரும் ஆய்வை உடனடியாக நிறுத்தக்கோரி விவசாய சங்கம் சார்பில் வழக்கு தொடர உள்ளோம். 1962 கேரள வனப்பாதுகாப்பு சட்டம், 1972 மத்திய அரசு வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், 1984 சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் ஆகிய சட்டங்களின் அடிப்படையில் அடர்ந்த வனப்பகுதியில் புதிய அணை கட்ட முடியாது.

இதே சட்டத்தைப் பயன்படுத்தி பெரியாறு அணையை தமிழக அரசு பலப்படுத்தும் போது கேரள அரசு பல்வேறு இடைஞ்சல்களை செய்துள்ளது. மேலும், பெரியாறு அணை அமைந்துள்ள பகுதி பூகம்பம் ஏற்படக்கூடியது என்ற வாதத்தையும் கேரள அரசு முன்பு கூறியுள்ளது. ஆனால், தற்போது கேரள அரசு இதையெல்லாம் மறைத்து புதிய அணை கட்டுவதாகக்கூறி பிரச்னையை அரசியலாக்கி தமிழக விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு உடனடியாக தீர்வு காண்பதற்கு ஐகோர்ட்டில் தலைமை வக்கீல்கள் லஜபதிராய், வேணுகோபால், ஐயம்பெருமாள் ஆகியோர் மூலம் விரைவில் வழக்கு தொடர உள்ளோம் என்றார்.

**விவசாயிகள் கூட்டம்**

நயினார்கோவில்: நயினார்கோவில் தோட்டக் கலைத்துறை மற்றும் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து வாழை சாகுபடி மற்றும் பின்சார் தொழில் நுட்பங்கள் குறித்து பாண்டியூரில் விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வேளாண்மை நிலைய வல்லுனர்கள் மீனாட்சி மற்றும் ஜெயந்திமாலா பயிற்சி அளித்ததுடன் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். தோட் டக் கலை உதவி இயக்குனர்

சேகர் திட்டங்கள் பற்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி அலுவலர்கள் சாத்தையா, தங்கவேலு செய்திருந்தனர்.

**இலவச "பம்ப் செட்' திட்டம் கூடுதல் அவகாசம் தேவை**

சிவகங்கை: இலவச "பம்ப் செட்' க்கு விண்ணப்பிக்க கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும். மின்சார நுகர்வை குறைக்க, விவசாயிகளின் பழைய "பம்ப் செட்' களை மாற்றி, புதியவை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. மொத்தம் 19 லட்சம் விவசாய மின் இணைப்புகள் உள்ளன. இதில் 15 லட்சம் பேருக்கு இலவசமாகவும்; மீதமுள்ளோருக்கு 50 சதவீத மானியத்திலும் மின் மோட்டார் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் மின்வாரியம் மூலம் வழங்கப்படுகின்றன. அவசர கதி: இதில் உள்ள விபரங்களை பூர்த்தி செய்து, சிட்டா, அடங்கல் நகலுடன், இன்றுக்குள் வழங்க வேண்டும் என, விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவற்றை கம்ப்யூட்டரில் பதிவு செய்து, வரும் 15 ம் தேதிக்குள், வாரியத்தினர் அனுப்ப வேண்டும். இன்றுடன் கெடு முடியும் நிலையில், பெரும்பாலான சிறு விவசாயிகள் விண்ணப்பிக்கவில்லை. இவர்களுக்கு தமதமாக விண்ணப்பம் வினியோகிக்கப்பட்டது. வி.ஏ.ஓ., பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், சான்றுகள் பெற விவசாயிகள் பல மணி நேரம் காத்து கிடக்கின்றனர். இதனால் உரிய காலத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாது. இதுகுறித்து விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஆதிமூலம் கூறுகையில்,""விண்ணப்பங்கள் தற்போது தான் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. வி.ஏ.ஓ., நில ஆவண சான்று பெற தாமதம் ஆகிறது. இவற்றை சிறு விவசாயிகள் எளிதில் பெற முடியாது. விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கூடுதல் அவகாசம் தேவை. விண்ணப்பத்தில் குறிப்பிடும் குதிரை திறன் அளவில் மோட்டார் வழங்க வேண்டும். பழைய ஒயர்களுக்கு பதில் புதியவை வழங்க வேண்டும்," என்றார்.

**அதிக வரத்து இருந்தும் காய்கறி விலை உயர்வு; நுகர்வோர் ஏமாற்றம்**

சிவகங்கை: சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறிகள் வரத்து அதிகமாக இருந்த நிலையில், வியாபாரிகள் விலையை உயர்த்தி விற்றதால், நுகர்வோர் ஏமாற்றம் அடைந்தனர். சந்தையில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ): கடந்த வாரம் 16க்கு விற்ற கத்தரிக்காய்- 24 ரூபாய்; வெண்டைக்காய் -20; 20 க்கு விற்ற பாகற்காய்- 24; 28 க்கு

விற்ற முருங்கை பீன்ஸ்- 40; கேரட்- 20;  30க்கு விற்ற இஞ்சி- 40; 28க்கு விற்ற அவரைக்காய்- 40; பட்டர் பீன்ஸ்- 80; 12 க்கு விற்ற வெங்காயம்- 15- பெல்லாரி- 15; காலி பிளவர்- 20; சேணை கிழங்கு- 40; சேம்பு- 40; 20 க்கு விற்ற பச்சை மிளகாய்- 30; 20 க்கு விற்ற பீட்ரூட்- 24; நூக்கல் -20; சோயா பீன்ஸ்- 40; எலுமிச்சை- 25; பூசணி- 20; பீர்க்கை- 20; டர்னிப் -30; சீனி அவரை- 10; மல்லித்தழை- 15 ரூபாய். பழங்கள்: முதல் ரக ஆப்பிள் - 40, இரண்டாவது ரகம் 30; 80 க்கு விற்ற ஆரஞ்சு- 60; சப்போட்டா 16; 60 க்கு விற்ற வெள்ளை திராட்சை 50, கறுப்பு-40; 15 க்கு விற்ற பேரிக்காய்- 20; அன்னாசி- 20; மாதுளை முதல் ரகம்- 60, இரண்டாவது ரகம்- 40 ரூபாய். பருப்பு விலை உயர்வு: 68 க்கு விற்ற துவரம் பருப்பு-70; 46 க்கு விற்ற தட்டப்பயறு- 48; 36க்கு விற்ற கடலை பருப்பு- 38; 80 க்கு விற்ற உளுந்தம் பருப்பு- 86; கொண்ட கடலை- 36; 78 க்கு விற்ற பாசி பருப்பு- 80; 66 க்கு விற்ற பாசிப்பயறு- 67; மொச்சை பயறு- 48, வெள்ளை மொச்சை- 76; பட்டாணி- 28, வெள்ளை பட்டாணி- 24; மல்லி- 48; சாதா புளி - 48, நயம்- 52; பொரி கடலை 40; வத்தல் முதல் ரகம்- 67, இரண்டாவது ரகம்- 53; மலைப்பூண்டு- 240, தரப்பூண்டு- 120, சாதா - 60;  சோம்பு- 140; வெந்தயம் -52; கசகசா -290; சீரகம்- 190; கடுகு- 45; மிளகு -260 ரூபாய். அரிசி விலை (கிலோ): கல்சர் பொன்னி-32; டீலக்ஸ் பொன்னி- 28;  ஐ.ஆர்., 20- 20; செல்லப்பொன்னி- 23; பொன்னி பச்சரிசி- 32; பச்சரிசி- 21; இட்லி அரிசி- 21; கோதுமை- 22; சோளம்- 16; கம்பு- 18; கேப்பை- 16; வரகரிசி- 36 ரூபாய்.  எண்ணெய் விலை நிலவரம்: 1,000 ரூபாய்க்கு விற்ற 16 லிட்டர் டின் தேங்காய் எண்ணெய் 1,100 ஆக உயர்ந்துள்ளது; சில்லரை விலை லிட்டருக்கு, 80 லிருந்து 88 ஆக அதிகரித்துள்ளது. கடலை எண்ணெய் சில்லரை விலை 85 க்கு விற்கப்படுகிறது. 46 க்கு விற்ற பாமாயில் 48; நல்லெண்ணெய் 90 ரூபாய். முகூர்த்தம், விழாக்கள் வருவதால் எண்ணெய், பருப்பு விலை தொடர்ந்து உயர்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**நெல்லை மாவட்டத்தில் இலவச மின் மோட்டார் திட்டத்தை 6 மாதத்தில் செயல்படுத்திட முடிவு**

கடையநல்லூர் : தமிழக அரசின் இலவச மின்மோட்டார் திட்டதை நெல்லை மாவட்டத்தில் 6 மாதத்தில் செயல்படுத்திட மாவட்ட நிர்வாகம் முடிவு செய்திருப்பதாக கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார். கடையநல்லூரில் நேற்று மாலை தமிழக அரசின் இலவச மின்மோட்டார் மாற்றி கொடுக்கும் திட்டத்திற்கான விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்  கலெக்டர் ஜெயராமன் தலைமையில் நடந்தது. கடையநல்லூர் மின்கோட்ட

செயற்பொறியாளர் நடராஜன் வரவேற்றார். மாவட்ட மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் முத்துராமலிங்கம், மின்வாரிய செயற்பொறியாளர் (பொது) செல்வக்குமார் மற்றும் கடையநல்லூர் மின்கோட்டத் தில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கலந்தாய்வு கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் ஜெயராமன் பேசியதாவது: சென்னையில் கடந்த மாதம் நடத்தப்பட்ட கலெக்டர்கள் மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் முதல் கருத்தாக விவசாயிகள் இலவச மோட்டார் வழங்கும் திட்டம் எடுத்து கொள்ளப்பட்டது. தமிழகம் முழுவதும் விவசாயிகளிடம் இதற்கான கருத்துகளை கேட்டறிய முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் விவசாயிகளை அழைத்து தமிழக அரசால் வழங்கப்பட உள்ள இலவச மின்மோட்டார் திட்டத்தில் உள்ள ஐயப்பாடு, திட்டத்தில் உள்ள செயல்பாடு போன்றவைகள் கேட்டறியப்பட்டு வருகிறது. நெல்லை மாவட்டத்தில் 13 ஆயிரம் மின்மோட்டார் பம்பு செட்டுகள் வைத்துள்ள முதல் வட்டமாக கருதக்கூடிய கடையநல்லூரில் இந்த கலந்தாய்வு கூட்டம் நடத்தப்படுகிறது. இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிக்கரமாகும் பட்சத்தில் "பவர்கட்' என்பது இருக்காது. விவசாயிகளால் தெரிவிக்கபடும் கருத்துகள் அனைத்தும் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். ஐந்தாண்டு திட்டமாக இந்த திட்டத்தினை செயல்படுத்திட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை இலவச மின்மோட்டார் மாற்றியமைக்கும் திட்டத்தினை 6மாத காலத்திற்குள் முடித்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பழைய மாடல்களில் விவசாயிகள் பயன்படுத்தி வரும் மின்மோட்டார்கள் மாற்றித்தரப்படும்.இவ்வாறு கலெக்டர் ஜெயராமன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் முத்துராமலிங்கம் பேசியதாவது: தமிழக அரசின் இலவச மின் மோட்டார் திட்டத்தினை பொறுத்தவரை விவசாயிகள் 3 எச்பி., 5 எச்பி., பயன்படுத்தினால் கூட அதே சக்தி கொண்ட மின்மோட்டார் வழங்கப்படும். அரசால் வழங்கப்பட்டுள்ள மிகப்பெரிய திட்டமான இத்திட்டத்திற்கு விவசாயிகள் முழுமையான ஒத்துழைப்பை தரவேண்டும். நெல்லை மாவட்டத்தில் 77 ஆயிரம் மின் மோட்டார் பம்பு செட்கள் அமைந்துள்ளன. இவற்றில் கடையநல்லூர் கோட்டத்தில் மட்டும் 13 ஆயிரம் மின்மோட்டார்களும், சங்கரன்கோவிலில் 12 ஆயிரம் மின்மோட்டார் பம்பு செட்களும் விவசாயிகளால்

பயன்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய மின்மோட்டார் வழங்கப்படுவதற்கான காரணமே மின் உற்பத்தியை பெருக்குவதற்குதான். தமிழகத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 33 சதவீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

கலந்தாய்வு கூட்டத்தில் கடையநல்லூர் நகராட்சி தலைவர் இப்ராகிம், கடையநல்லூர் உதவி கோட்ட பொறியாளர் திருமலைக்குமாரசாமி, யூனியன் பிடிஓ மோகன், வருவாய் ஆய்வாளர் ஆதிநாராயணன், நகராட்சி கமிஷனர் அப்துல்லத்தீப் மற்றும் மின்வாரிய செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இலவச மின்மோட்டாருக்கு உத்தரவாதம் உண்டு: கடையநல்லூரில் நேற்று நடந்த இலவச மின்மோட்டார் தொடர்பான கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயி ஒருவர், ""அரசால் வழங்கப்படும் இலவச மின்மோட்டார் திட்டத்தில் விவசாயிகளுக்கு மோட்டார் வழங்கிய பிறகு அதில் பழுது ஏற்பட்டால் அதற்கான உத்தரவாதம் என்ன'' என்றார். இதற்கு பதிலளித்த கலெக்டர், ""ஒரு கார் வாங்கினாலும் கேரண்டி உண்டு. இதுமட்டுமின்றி இப்போதெல்லாம் எந்த பொருட்கள் வாங்கினாலும் கேரண்டி தருகிறார்கள். அதுபோன்று தமிழக அரசால் வழங்கப்பட உள்ள இலவச மின்மோட்டார் திட்டத்தில் மோட்டார் பழுதடைந்தால் நிச்சயமாக அதற்கான கேரண்டி வழங்கப்படும். அந்த உற்பத்தி நிறுவனம் சார்பில் இரண்டு வருட உத்தரவாதம் வழங்கப்படுகிறது. ஏற்கனவே தமிழக அரசு இலவச கலர் "டிவி' திட்டத்தில் "டிவி' பழுதடைந்தால் அதற்கான பழுதுநீக்கம் செய்யும் பணி உடனடியாக செய்து கொடுக்கப்படுகிறது. 3 எச்சி., என்றாலும், 5 எச்பி., மோட்டார் வைத்திருந்தாலும் மோட்டாருக்கான உத்தரவாதம் இரண்டு ஆண்டு நிச்சயமாக உண்டு'' என குறிப்பிட்டார் கலெக்டர்.

**கடையநல்லூர் பகுதியில் தக்காளி விற்பனை ஜோர்**

கடையநல்லூர் : கடையநல்லூர் வட்டார பகுதிகளில் தக்காளி சீசன் துவங்கிவிட்டதை அடுத்து தக்காளி மார்க்கெட் களைகட்டியுள்ளது. கிலோ 4 ரூபாயில் இருந்து 5 ரூபாய் வரை விற்கப்படுகிறது.தமிழகத்தில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் தக்காளி சீசனுக்கு புகழ்பெற்ற பகுதியாக கடையநல்லூர் விளங்குகிறது. இப்பகுதியை

சுற்றி அமைந்துள்ள மேலக்கடையநல்லூர், காசிதர்மம், கம்பனேரி, கரடிகுளம், வலசை, பாலஅருணாசலபுரம், புதுக்குடி, மாவடிக்கால், இடைகால் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பல ஏக்கர் விளைநிலங்களில் தக்காளி சாகுபடிகள் செய்யப்படுவதுண்டு. இப்பகுதிகளில் விளைச்சல் பெறும் தக்காளி மதுரை, சேலம், திண்டுக்கல், கரூர், ஈரோடு, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், கேரளா, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

இதன்படி இந்தாண்டு தக்காளி சீசன் துவங்கிவிட்டதை அடுத்து தக்காளி மார்க்கெட் வியாபாரம் களைகட்டி காணப்படுகிறது. காலை 10 மணி முதல் கூடை கூடையாக விளைந்த தக்காளிகளை விவசாயிகள் மார்க்கெட்டிற்கு இரண்டு சக்கர வாகனங்களிலும், லோடு ஆட்டோகளிலும் கொண்டு வந்த வண்ணம் உள்ளனர். இதனால் தக்காளி வரத்து அதிகமாக காணப்படுவதை அடுத்து நேற்றைய நிலவரப்படி தக்காளி விலை கிலோ ஒன்றிற்கு 4 ரூபாயிலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நல்ல தரத்திலான தக்காளி 5 ரூபாய் வரை விற்கப்படுவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து அதிகமாகும் என்பதால் இன்னும் சில நாட்களில் கிலோ தக்காளி இரண்டு ரூபாய் வரை விற்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பேய்க்குளம்: பேய்க்குளத்தில் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் கருமேனி ஆறு உப வடிநில பகுதி விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி ஸ்ரீவெங்கடேஸ்வரபுரத்தில் நடந்தது. கூட்டத்திற்கு ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் நெல் விளைபொருள் உற்பத்தியாளர் குழு தலைவர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் பஞ்., தலைவர் விஜயலெட்சுமி ஸ்ரீதர் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் மணிகண்டன் வரவேற்றார்.

தூத்துக்குடி மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் முருகானந்தம் நெல் மற்றும் நிலக்கடலை பயிர்களின் அறுவடை, பின் செய் நேர்த்தி தொழில் நுட்பம் குறித்தும், நிலக்கடலை, நெல் சாகுபடியில் நுண் ஊட்ட சத்துக்கள் இடுவதால் கூடுதல் மகசூல் கிடைப்பது குறித்தும் பேசினார். கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர்

சீனிவாசன் செம்மை நெல் சாகுபடி குறித்தும், ஸ்காட் வேளாண்மை அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் அசோக்குமார், நிலக்கடலை பயிரில் மகசூலை அதிகரிப்பது குறித்தும், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் சேர்மராஜன் கடலை சாகுபடியில் தெளிப்புநீர் பாசனத்திற்கு 65 சதவீத மானியம் வழங்கப்படுவது குறித்தும் பேசினர். வேளாண்மை அலுவலர் திருச்செல்வம் வேளாண்மை திட்டங்கள் குறித்து பேசினார். மேலும் வேளாண்மை அலுவலர்கள் சங்கர், ராஜா, கதிரேசன், அகிலா, சரவணகுமார் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் திருப்பதி நன்றி கூறினார்

# நிலம் இல்லாத ஏழை பெண்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க தீர்மானம்

**&NX¶ %N±,8_**

**நிலம் இல்லாத ஏழை பெண்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்....**

**என என்.ஆர்.டபிள்யூ.சி.டி.,பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு வலைப்பணி மற்றும் சேலம்,மேச்சேரி பீஸ் இயக்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். உலக மகளிர் தினத்தையொட்டி தமிழச்சங்கத்தில் நேற்று என்.ஆர்.டபிள்யூ.சி.டி.மற்றும் பீஸ் அமைப்பின் சார்பில் பெண்கள் மாநாடு நடைப்பெற்றது.இந்த மாநாட்டிற்கு வி.டி.இ.ஒ.இயக்குநர் ஏ.அருள்ஜோதி வரவேற்று பேசினார். பீஸ் இயக்குநர் கே.முனுசாமி முன்னிலை வகித்தார்.**

**மேயர் ரேகா பிரியதர்ஷினி தலைமை வகித்தார்.**

**பெண்கள் முன்னனி பொதுச்செயலாளர் கிறிஷ்டினா பெண்களும் அரசியலும் என்ற தலைப்பிலும், பெண்களின் இன்றைய நிலையும், உரிமையும் என்ற தலைப்பில் எல்.தேன்மொழியும், விழித்திருக்குனடி பெண்ணே என்ற தலைப்பில் கவிஞர் முகிலும், பெண்களும் எழுச்சியும் என்ற தலைப்பில் மரியலூயிசாவும் பேசினர். எம்.சின்னதம்பி, சக்தி சொசைட்டி இயக்குநர் என்.நேதாஜி, எஸ்.புஷ்பா, சர்வீஸ் ட்ரஸ்ட் இயக்குநர் எஸ்.புஷ்பா, எஸ்.ஸ்டாலின், பி.ஈஸ்வரி, காடையாம்பட்டி கல்விக்குழு தலைவர் பி.அண்ணாமலை ஆகியோர் வாழ்த்தி பேசினர்.**

**மாநாட்டில் மத்திய,மாநில அரசுகள் பெண்களுக்கு கட்டாயம் 50 சதவீதம் இட ஒதுக்கீடு அமுல்படுத்த வேண்டும்.பெண்கள் மீதான வன்முறைகள் அதிகம் நிகழாமல் இருக்க கிராமபுறங்களில் உள்ள மதுககடைகளை உடனடியாக மூட வேண்டும். நிலம் இல்லாத ஏழை பெண்களுக்கு 2 ஏக்கர் நிலம் கட்டாயம் வழங்க வேண்டும்.**
**மாற்றுதிறன்படைத்தோர்களுக்கான வாழ்வுரிமை மற்றும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். ஆன்மீக பார்வையில் பெண்களை சகதியில் தள்ளும் போலி சாமியார்களை ஒழிக்க வேண்டும் என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் கலையரசி நன்றி கூறினார்.**

தினமணி

## செம்மை நெல் சாகுபடியில் புதிய வேளாண் தொழில்நுட்பங்கள்

ஜி.சுந்தரராஜன்

First Published : 09 Sep 2010 12:00:00 AM IST



செம்மைநெல் சாகுபடியில் கோனோவீடர் கருவிக்கு மாற்றாக சைக்கிள் வடிவில் கர்நாடக மாநில முன்னோடி விவசாயிகள் வடிவமைத்து பயன்படுத்தும் களை எடுக்கும் கருவி.

சிதம்பரம்: தமிழக விவசாயிகள் சில ஆண்டுகளாக செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் மூலம் விவசாயம் செய்து வருகின்றனர். முன்னோடி விவசாயிகள் பலர் தங்களின் அனுபவம், தொழில்நுட்ப திறனை பயன்படுத்தி தற்போதைய செம்மை

நெல் சாகுபடி கருவிகளுக்கு மாற்றாக புதிய வேளாண் கருவிகளை, புதிய முறையிலான சாகுபடி முறையை பின்பற்றி அதிகளவு மகசூல் பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலை. வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது: தற்போது செம்மை நெல் சாகுபடியில் முக்கிய பயன்பாட்டு உழவியல் கருவியாக கோனோவீடர் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. நடவு செய்து முடிந்த சில நாள்களில் களைகளை கட்டுப்படுத்தவும், அழிக்கவும் பயன்படும் கோனோவீடர் கருவிக்கு மாற்றாக கர்நாடக மாநில விவசாயிகள் சைக்கிள் சக்கர வடிவில் புதிய களை எடுக்கும் கருவியை வடிவமைத்து, அகலத்தை 3 அங்குலம் அளவுக்கு அதிகப்படுத்தி நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய கோனோவீடரில் ஒற்றை கைப்பிடியை மாற்றி இரண்டு கைப்பிடிகளை பொருத்தியுள்ளனர். இதன் மூலம் விவசாயிகள் எளிதாக உறுதியான பிடிப்புடன் கருவியை பயன்படுத்த முடிகிறது.

மேலும் அந்த சைக்கிள் வடிவிலான களையெடுப்பு கருவியுடன் அதிகப்படியாக களை கொத்து கருவியும் பொருத்தப்பட்டுள்ளது.

சமுதாய முறையில் ... செம்மை நெல் சாகுபடியில் குறைந்தளவு நாற்றங்கால் நிலமே போதுமானது. ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு தேவையான நாற்றங்காலை ஒரு சென்ட் நிலத்தில் உருவாக்க முடியும். இருப்பினும் செம்மை நெல் சாகுபடிக்கு தேவைப்படும் பாய் நாற்றங்கால் தயாரிக்க போதிய வேளாண் தொழில்நுட்பத்திறன் தேவை. இவை தெரியாத காரணத்தால் பல பாரம்பரிய விவசாயிகள் செம்மை நெல் சாகுபடியில் ஈடுபட விரும்பவில்லை.

இந்த நிலையை போக்க விழுப்புரம் மாவட்ட பூம்புர் கிராமத்தில் கூட்டுறவு சமுதாய முறையில் 15 முதல் 20 விவசாயிகள் (குறிப்பாக வளங்குன்றிய சிறு மற்றும் குறு விவசாயிகள்) சேர்ந்து சமுதாய அடிப்படையில் ஒரே இடத்தில் பாய் நாற்றங்கால் அமைத்து, நன்றாக பராமரித்து, 14-ம் நாளில் தங்களின் பயன்பாட்டுக்கும் பிற விவசாயிகளின் பயன்பாட்டுக்கும் நாற்றுகளைத் தந்து வெற்றிகரமாக செம்மை நெல் சாகுபடியில் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய சமுதாய சூழலில் குறைந்த வேளாண் இடுபொருள்களை பயன்படுத்தி அதிக அளவு மகசூல் பெற்றுத் தரும் செம்மை நெல் சாகுபடியை புதிய வேளாண் தொழில்நுட்பங்கள், சமுதாய அளவிலான நாற்றங்கால் உற்பத்தி முறைகள் ஆகியவற்றை செயல்படுத்தி உணவு தானிய உற்பத்தியை பெருக்கி விவசாயிகள் பயன் பெறலாம்.

## தட்ப வெப்ப நிலை மாற்றத்தால் இனப்பெருக்கம் அதிகரிப்பு: பயிர்களைச் சேதப்படுத்தும் பப்பாளி மாவுப் பூச்சிகள்

ந.குப்பன் First Published : 09 Sep 2010 12:00:00 AM IST



பூச்சிகள் தாக்கிய பப்பாளி மரம்.

புதுச்சேரி: தட்பவெப்பநிலை மாற்றத்தால் பயிர்களில் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பப்பாளி மாவுப் பூச்சி அதிகம் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த மாவுப் பூச்சி குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறியது:

"பேராகாக்கஸ் மார்ஜினேட்டஸ்' என்ற பப்பாளி மாவுப்பூச்சி முதல்முதலில் 1992-ம் ஆண்டு மெக்ஸிகோ நாட்டில் தோன்றி 2008-ம் ஆண்டு இந்தியாவில் பரவி 2009-ம் ஆண்டு தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் பப்பாளி மரத்தின் இலை, மரம், தண்டு மற்றும் பழங்களையும் தாக்கி அதிக சேதத்தை ஏற்படுத்தி வருகிறது.

சாறு உறிஞ்சும் இந்தப் பூச்சிகள் பப்பாளி மட்டுமின்றி மற்ற பயிர்களான மா, கறிப்பலா, வாழை, கொய்யா, பருத்தி, மரவள்ளி, நெய்வேலி காட்டாமணக்கு, எலுமிச்சை, துளுக்க சாமந்தி, கத்தரி, வெண்டை, தக்காளி, சூரியகாந்தி, பயிறு வகைகள், பார்த்தினியம், ஆமணக்கு, பூசணி வகைகள், தேக்கு, குரோட்டன்ஸ், சீதாப்பழம், புளிச்சக்கீரை மற்றும் சாலையோரங்களில் உள்ள மரங்களையும் தாக்கி சேதப்படுத்துகின்றன.

அதிக வெப்பம், மிகுந்த காற்றின் ஈரப்பதம், கரியமிலவாயுவின் அதிகமான கசிவு, மாவு போன்ற பாதுகாப்பு கவசம், முன்னுக்குப் பின் முரணான முறையில் ரசாயன பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், குறைவான நன்மை செய்யும் பூச்சிகள் வயலில்

இருப்பது போன்ற காரணங்களால் இந்தப் பூச்சியின் இனப்பெருக்கம் அதிகமாக இருக்கிறது.

**மேலாண்மை முறைகள்**

களைகளை அகற்றி வயல்களைச் சுத்தமாக வைக்க வேண்டும். பூச்சிகள் அதிகம் பரவாமல் தடுக்க தாக்கப்பட்ட செடிகள் மற்றும் களைச் செடிகளைப் பிடுங்கி எரிக்க வேண்டும்.

இளம் பருவத்திலிருந்து பூச்சி மற்றும் எறும்புகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க வேண்டும். தாக்குதல் குறைவாக இருக்கும்போதே தகுந்த பூச்சி மேலாண்மை முறைகளைக் கையாள வேண்டும்.

வயல்களில் ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகள் அதிகம் இருக்கும்போது ரசாயன பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

சேதம் ஆரம்பிக்கும்போது இரை விழுங்கிகளான சிகப்பு ஆஸ்திரேலியா வண்டுகளை ஏக்கருக்கு 300 என்ற அளவிலும், கருப்பு ஆஸ்திரேலிய பொறி வண்டுகளை ஏக்கருக்கு 400 என்ற அளவிலும், பச்சைக் கண்ணாடி இறக்கைப் பூச்சிகளை ஏக்கருக்கு 1000 என்ற அளவிலும் ஏவி விட வேண்டும்.

இந்த வண்டுகள் பெங்களூரில் உள்ள உயிரியல் கட்டுப்பாடு ஆய்வகத்தில் கிடைக்கும். சேதம் குறைவாக இருந்தால் 2 சதவீத வேப்ப எண்ணெய்யை 20 மில்லி எடுத்து 1 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது 5 சதவீத வேப்பங்கொட்டை சாறு அல்லது 2 சதவீத புங்கம் எண்ணெய் 20 மில்லி எடுத்து 1 லிட்டர் தண்ணீர் அல்லது மீன் எண்ணெய் ரோஸின் சோப்பு 25 கிராமை, 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

ஒரு பங்கு மண்ணெண்ணெய், ஐந்து பங்கு பச்சரிசி தவிடு ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கலந்து மாவுப் பூச்சியின் மேல்படும்படி தூவும்போது மாவு பூச்சிகள் இறக்க நேரிடும்.

உயிரி ரக பூஞ்சாணக் கொல்லிகளான "பெவேரியா பேசியானா' ஒரு கிலோ மற்றும் "வெர்டிஸிலியம் லிகானி' ஒரு கிலோ என்ற விகிதத்தில் கலந்து ஓர் ஏக்கர் பரப்பளவில் மாலை நேரத்தில் அதிக திறன் கொண்ட தெளிப்பான் மூலம் மாவுப் பூச்சியின் மீது படும்படி தெளிக்க வேண்டும்.அப்போது இந்த பூஞ்சாணங்கள் 5 தினங்களில் நோயை உருவாக்கி மாவுப்பூச்சிகளை அழிக்கும்.

இந்த உயிரி ரக பூஞ்சாணக் கொல்லிகள் புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கிடைக்கும். சேதம் அதிகமாகக்

காணப்பட்டால் ரசாயன பூச்சிக் கொல்லிகளை அதிக திறன் கொண்ட தெளிப்பானைப் பயன்படுத்தி தெளிக்கலாம்.

## மானிய விலையில் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தலாம்

First Published : 02 Sep 2010 01:21:03 PM IST

ராமநாதபுரம், செப். 1: மானிய விலையில் விதைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தி நல்ல மகசூல் பெறுமாறும் ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி புதன்கிழமை கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ராமநாதபுரம் மாவட்டத்தில் 13 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 90 சதவிகித பரப்பு மானாவாரியாகவே சாகுபடி செய்யப்படுகிறது. வடகிழக்குப் பருவமழையின் போது கிடைக்கப் பெறும் மழையால் கண்மாய்கள் நிரம்பி அதன் ஆயக்கட்டுப் பகுதிகளில் பகுதி மானாவாரியாகவும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

தற்சமயம் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடங்க ஆயத்தமாக முக்கிய இடுபொருளான விதைகளை வாங்கி இருப்பு வைக்கும் பணியைச் செய்து வருகின்றனர். வேளாண் துறையில் பல்வேறு திட்டங்கள் மூலம் மானிய விலையில் நெல் விதைகள் விநியோகிக்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி சான்று பெற்ற விதைகளான ஆடுதுறை 45, ஆடுதுறை 43, ஐஆர். 36, ஆடுதுறை 39, பிபிடி ஆகிய ரகங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் கடைகளின் மூலம் விநியோகிக்கப்படும் விதைகளுக்கும் கிலோவிற்கு 5 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களிலும் சான்று பெற்ற நெல் விதைகளும் உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சான்று பெற்ற நெல் விதைகளுக்கும் கிலோவுக்கு 5 மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இந்த தருணத்தைப் பயன்படுத்தி சான்று பெற்ற விதைகளைப் பெற்று நல்ல மகசூல் அடையலாம்.

## மானிய விலையில் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தலாம்

First Published : 02 Sep 2010 01:21:03 PM IST

ராமநாதபுரம், செப். 1: மானிய விலையில் விதைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தி நல்ல மகசூல் பெறுமாறும் ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி புதன்கிழமை கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ராமநாதபுரம் மாவட்டத்தில் 13 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 90 சதவிகித பரப்பு மானாவாரியாகவே சாகுபடி செய்யப்படுகிறது. வடகிழக்குப் பருவமழையின் போது கிடைக்கப் பெறும் மழையால் கண்மாய்கள் நிரம்பி அதன் ஆயக்கட்டுப் பகுதிகளில் பகுதி மானாவாரியாகவும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

தற்சமயம் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடங்க ஆயத்தமாக முக்கிய இடுபொருளான விதைகளை வாங்கி இருப்பு வைக்கும் பணியைச் செய்து வருகின்றனர். வேளாண் துறையில் பல்வேறு திட்டங்கள் மூலம் மானிய விலையில் நெல் விதைகள் விநியோகிக்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி சான்று பெற்ற விதைகளான ஆடுதுறை 45, ஆடுதுறை 43, ஐஆர். 36, ஆடுதுறை 39, பிபிடி ஆகிய ரகங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் கடைகளின் மூலம் விநியோகிக்கப்படும் விதைகளுக்கும் கிலோவிற்கு 5 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களிலும் சான்று பெற்ற நெல் விதைகளும் உரமும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சான்று பெற்ற நெல் விதைகளுக்கும் கிலோவுக்கு 5 மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் இந்த தருணத்தைப் பயன்படுத்தி சான்று பெற்ற விதைகளைப் பெற்று நல்ல மகசூல் அடையலாம்.

## அதிக மகசூல் தரும் நுண்ணூட்டக் கலவை: வேளாண் துறை யோசனை

First Published : 02 Sep 2010 03:49:54 AM IST



நுண்ணூட்ட கலவை இடப்பட்டதால் அதிக மகசூல் பெற்ற தென்னை

அரக்கோணம், செப். 1: நுண்ணூட்டச் சத்து அளிப்பதன் மூலம் தென்னையை அதிக மகசூல் பெறும் பயிராக மாற்ற முடியும் என்று தமிழக வேளாண்துறை காவேரிபாக்கம் உதவி இயக்குநர் வெ.ஜெயசந்திரன் கூறினார்.

தென்னையில் நல்ல வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் என்பது மண்வளத்தை பொருத்தே அமைகிறது. நீண்டகால பயிரான தென்னை பல ஆண்டுகளுக்கு நல்ல பலன் தரக்கூடியது. இதனால் இதற்கு தொடர்ந்து நுண்ணூட்டச் சத்து தேவை.

பொதுவாக விவசாயிகள், தழை, மணி, சாம்பல் சத்துகளையே பயிருக்கு அளிக்கின்றனர். நுண்ணூட்டச் சத்துக்களான துத்தநாகம், காப்பர், இரும்பு, மாங்கனீசம், போரான் போன்ற சத்துகளை நமது விவசாயிகள் மண்ணில் இடுவதில்லை. இதனால் நுண்ணூட்ட சத்துக்களின் பற்றாக்குறை ஏற்பட்டு தென்னையின் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்படுகிறது. இதனால் மகசூல் பாதிப்பை தென்னை சந்திக்கிறது. தென்னை நன்றாக வளர்ச்சி பெற்று, தொடர்ந்து மகசூல் தருவதற்கு நுண்ணூட்டச் சத்துகளை விவசாயிகள் அளிப்பது அவசியம்.

6 மாதத்திற்கு ஒரு முறை 300 முதல் 500 கிராம் வரை ஒரு மாத காலத்திற்கு நுண்ணூட்டக் கலவை இடுவது நல்லது.

மரத்தில் இருந்து 3 அடி தள்ளி 12 அடி ஆழத்தில் சுற்றிலும் நுண்ணூட்டக் கலவை இட வேண்டும். 5 வயதிற்குட்பட்ட தென்னை மரங்களுக்கு இதில் பாதி அளவு இட்டாலே போதும்.

நுண்ணூட்டச் சத்துகளை சூப்பர் பாஸ்பேட் உரத்துடன் கலந்து இடக்கூடாது. இது மிகவும் முக்கியம்.நுண்ணூட்ட கலவை தென்னை வளர்ச்சியை துரிதப்படுத்தி நோய்

எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. மண்ணில் உள்ள மற்ற சத்துகளை எளிதில் வேருக்கு எடுத்துச் செல்ல உதவுகிறது.

நுண்ணூட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதினால் மரம் சீரான வளர்ச்சி அடைவதுடன், அதிக மகசூல் மற்றும் எண்ணெய் சத்து கிடைக்க வழிவகை செய்கிறது.

இரும்பு மற்றும் போரான் ஆகியன குரும்பை உதிர்வது மற்றும் ஒல்லிகாய்கள் காய்ப்பதைத் தடுக்கின்றன. நுண்ணூட்டச் சத்துக் காரணமாக செழிப்பாக வளரும் தென்னை மரங்களில் இரியோபிட் சிலந்தி தாக்குதல் குறைகிறது.

மேலும் விவரம் பெற விரும்புவோர் அந்தந்தப் பகுதிகளில் உள்ள வேளாண்மை துறை அலுவலர்களை அணுகலாம் என காவேரிபாக்கம் உதவி இயக்குநர் வெ.ஜெயசந்திரன், வேளாண் அலுவலர் பாபு, உதவி வேளாண் அலுவலர் திருக்குமரன் ஆகியோர் கூறினர்.